കേരളീയം

V. 1. NO. 2 12 ജനു 1928

JL
m211, N28RN
N28;1.2
188985

661

Reg. No. 2324.

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

MADRAS BOOKS 1928


| வருஷ சந்தா | | காரியாலயம்: |
|---|---|---|
| உள்நாடு | ரூ. 7 8 0 | No. 11, வெள்ளாளத் தெரு, |
| வெளி நாடு | ரூ. 9 0 0 | புரசைபாக்கம், சென்னை. |

Vol 1.] 1928ஹ ஜனவரிமீ 12உ [No. 2.


பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கலாநிலயம் | 21 |
| 2. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 23 |
| 3. | காந்திமதி (Novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 26 |
| 4. | தமிழ்ப்பாடம். | 29 |
| 5. | வர்த்தமானம் | 34 |
| 6. | அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர். B. A. | 35 |
| 7. | காங்கிரஸ் | 37 |


## கலா நிலயம்

### செய்யும் கருமமும் செயல் வகையும்.

188985

I

நமது கண்களே காணப்படும் பொருளல்ல. அவை மற்றப்பொருள்களையும் அவைதம் தன்மையையும் காண்பதற் கமைந்த கருவியேயாம். பார்ப்பதற்குப் பொருளொன்றும் இல்லாத காலத்திலும் கண்கள் உடையோனுக்கு ஒளியாயினும்தோன்றும். ஆனால், இதற்கு மாறாகப் பொருளெல்லாம் இருக்குமாயினும் கண்ணிலார்க்கு ஒன்றுமேயில்லை. பொருள்களைப்பற்றிப் பிறர் சொல்லக் கேட்பினும் கண்ணிலார் அவைகளின் தன்மையை உணரார். உணர்ந்ததாய்ப் பாவிக்குமிடத்தும், அது பெரும்பான்மை சரியான உணர்வாய் இருக்க இடமில்லை. இந்த நினைவோடு "கண்ணுடைய ரென்போர் கற்றோர்" எனும் திருவள்ளுவரின் வாக்கினது நுட்பத்தை ஆராய்ந்தால் கல்வியின் தொழிலும் தன்மையும் உண்மையாக இருக்கும் வண்ணம் யாதென விளங்கும்.

கல்வி வேறு அறிவு வேறு. கல்வியறிவு என வழங்கப்படும் தொடர்க்குக் கல்வியாகிய அறிவு என்று அர்த்தம் இல்லை. அது கல்வியும் அறிவும் எனவிரியும் உம்மைத் தொகையே. அல்லாது, 'கல்வியால் உண்டாகும் அறிவு' என உருபொடு பயனும் தொக்க மூன்றன் தொகையாகக் கொள்ளலாமோ வெனின்; ஆம், ஒருவாறு கொள்ளலாம். மூன்றாம் வேற்றுமையாயின் கருவிப் பொருளில் வந்தது என்று நினைத்தால் மாத்திரம் போதாது. 'மண்ணாற் செய்த குடம்' என்னும் வழக்கில் முதற் கருவியாகிய மண்ணே குடமாக ஆவதுபோல், கல்வியே அறிவாக ஆகின்றது என்று எண்ண ஒண்ணாது; 'உளியால் செய்தபெட்டி', என்னுங்கால் உளியே பெட்டியாக மாறாமல் பெட்டியைச் செய்வதற்கு உளி துணைக் கருவியாகி நிற்கின்றதேபோல், அறிவு விளைவதற்குக் கல்வி ஒரு துணைக்கருவியாய்த் தனித்து நிற்கும் சாதனம் என்பது மறக்கா திருப்போமாயின் கல்வியறிவை மூன்றன் தொகை என்றுரைப்பதால் தவறு நேராது.

உலகெலாம் நிலை பெயர்ந்து அல்லலுற்றிருப்பது காணச் சகியாராகிப் பல பெருமக்கள், அவ்வல்லலைத் தீர்க்குமாறு முயன்றுவருகின்றனர். அத்தகைய முயற்சிகளில் கல்வியின் வளர்ச்சியே முதன்மையாக வைக்கப் பெறுகின்றது. அது தக்கதே. எனினும் கல்வியின் தத்துவத்தை யுணர்ந்த பெரியோரால் வகுத்த முறையை நடத்திவைப்போரிலும் குற்றங் கூறுவோரிலும் பலர், கல்விக்கும் அறிவிற்கும் இயற்கையாயுள்ள வேறுபாட்டை உணராமல் ஒன்றை மற்றதென மயங்கி விவகரிப்பதால்நினைத்த தொன்றும் செய்வதொன்றுமாய் முடியக் காண்கிறோம்.

தமக்கு நற்கதி தேடிக் கொள்ளுவோரும் மற்றவர்க்கு அக்கதி தேடிவைப்போரும் ஆகிய இருதிறத்தோரும் செவ்வனே சில செய்திகள் தேர்ந்துணர்தல் நன்மையாம். மக்களாயினோர் இக்காலம் நிலைகுலைந்து அலைவது எதுகருதி எனச் சிறிது சிந்தித்தால் ஒன்று எளிதில் விளங்கும். பயன் பழுத்த வாழ்க்கை வாழ வேண்டுமெனும் ஒரே கருத்து எல்லார் உள்ளத்திலும் கொதிக்கின்றது. வாழ்க்கையின் பயன்தான் யாவதோ, என்று வினவினால் 'கஷ்டமில்லாமல் சுகமாயிருத்தல்' என்னும் விடையே ஒருவாயாய் வரும். மாந்தர்களில் உத்தமர்கள், மத்திமர் அதமர் ஆய மூவகையினோரும் எங்கும் இருப்பர். அம்மூவகையினோரும் சுகமாயிருத்தலே பிறவியால் பெற்ற பயன் என்பரேனும், கடையாயினோர் பிறர் வருந்தத்தாமும், இடையாயி

ஞேர் பிறரோடு தாமும், முதலாயினேர் தாம் வருந்தப் பிறரும், அந்தச்சுகத்தை யடையத்தேடும் வகையிற்றனே வேறுபாடு உளது. இந்த முத்திறத்தோரும் தேடும் சுகம் தேடத்தேடத் தூரமே யாவதற்குக் காரணம் என்ன வென்று உணர்ந்திருப்பாராயின் செல்லும் வழியை மாற்றிக் கொள்வர். 'உணர்ந்திருப்பாராயின்' என்று நாம் இங்கு ஓர்ந்து சொல்கின்றேம். ஏனெனில், காரணத்தை ஒருவாறு அறிந்திருப்பினும் இருக்கலாமே யன்றி, அதைப் பெரும்பான்மையோர் உள்ளுற உணர்ந்ததில்லை. உலகத்திலே நமது வாழ்க்கையோடு தொடர்ந்து வருகின்ற பொருட்களால் நமக்குச் சுகமும் துக்கமும் உண்டாகுமென எண்ணி, அதற்கேற்றவாறு நம் கருமங்களைக் கையாள்வது முற்றிலும் தவறு என்றும், சுகமும் துக்கமும் நமது மனம் அப்பொருள்களோடு ஊடாடி ஏற்றுக் கொள்ளும் பான்மையையே பொருந்தி யிருக்கிறது என்றும் சொல்லித் தத்துவப் பிரசங்கங்கள் செய்வோரும் கேட்போரும் நாம் முன்சொன்ன காரணத்தை அறிந்தவர். சொல்லும் இக்காரணம் உண்மையே என்பதற்குச் சிறிதேனும் ஐயம் இல்லை. காரணமும் உண்மையாயிருக்க அதைக் காட்டுவோரும் பலர் இருக்கக் காட்டிய காரணத்தைக் கேட்டபடி உடன்பட்டுக் கொண்டாடுவ ராவாரேனும் அந்தத்தில் மனத்திலே விளைவதே சுகம் என்னும் நினைவு போக்கிப் புறப்பொருளால் வருவதே இன்பமென்று உலகடங்கலும் விவகரித்து ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றித் தற்காலம் திரிகின்ற விந்தைகளை ஆராயத் தலைப்பட்டால் கல்விவேறு அறிவுவேறு என்னுமொரு மெய்ம்மையை எய்தி யடைகின்றேம்.

இன்பத்திற்குக் காரணம் எதுவாயினுமாகுக, இவ்வுலகில் துன்பத்திற்குக் காரணம் பொய்யே என்பது நிச்சயம். பொய் மெய் என்னும் இப்பதங்களை நாம் இங்குச் சாதாரணப் பொருளில் உபயோகப்படுத்த வில்லை. கேட்ட கடனை நாளையே திருப்பி விடுகின்றேன் என்று உரைப்பதுவும், பொதுத் தேர்தல் காலத்தில் வாக்குரிமை உடையவரோடு பேசுகின்ற பேச்சுக்களும் பொய்களல்ல; பொய்யின் வெளித்தோற்றங்கள் அவை. பொய்யெனும் பேய் பிடித்தாட்ட மாந்தர்கள் ஆடுகின்ற ஆட்டங்களே இன்னவித மொழிகளும் அம்மொழிகளுக்கு ஏற்ற செயல்களும் ஆகுமே அன்றி அவை தாமே பொய்கள் ஆகா. கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்னும் நினைவே சிறிதும் இல்லாமல், நான் நான் எனத்தருக்கி எனது எனது எனக் கவர்ந்து, நீ நீ, நினது நினது எனப் பிரித்துணர்வதற்குத் தூண்டுகின்ற அவ்வுணர்ச்சிதான் பொய். சொல் மாத்திரையி லல்லாமல், உணர்வோடு கலந்து கடவுள் உண்டெனும் உண்மை உறையுமாயின் மனத்தின்கண் பொய்க்காடு அடர்ந்திடாது.

பொய்ப் பழக்கம் அன்னதன்மைய தென்றபின் மெய்யுணர்வு யாதென்று தெரிந்துகொள்ளல் வெகு எளிது. கடவுளின் நினைவே மெய். உன்னிலும் என்னிலும் உலகத்திலுள்ள சராசரங்களனைத்திலும் அக்கடவுளின் உருவமொன்றையேகாணும் ஓர் இயற்கைத் தன்மை பெற்றவர்க்கன்றிக் கடவுளின் நினைவு உண்டென்று சொல்வதற்கில்லை. எல்லாம் கடவுள் என்றால் எல்லாம் ஒன்றே என்பது ஏற்படுகின்றது. நிறத்தாலும் குணத்தாலும் அமைப்பாலும் செயல்களாலும் இன்னவித மற்றவைகளாலும் வெளியாகத் தோன்றும் வேற்றுமையே நம் கண்முன் உறுத்தாமல், அவை தமக்கு உயிர்நிலையாய ஒரு ஒற்றுமையே நமதெண்ணத்தில் முதல் நினைவாக எழுமாயின் கடவுளின் உணர்ச்சிக்கு ஆளாகி வருகின்றேம் என்னும் அடையாளம் தோன்றுவதாகின்றது. அப்பொழுது மெய்வளரும் நெஞ்சினர்கள் காண்கின்ற காட்சியாம் கடவுளைச் சிருட்டியின் மூலமாய்க் கண்டு கொள்கின்றேம். இந்த மெய்கண்ட வாழ்க்கையே வாழ்க்கை. துன்பத்தின் பேர்தானும் தோன்றாத வாழ்க்கையே இது. பிறவெல்லாம் இன்பத்தின் பேர்மட்டுமே எஞ்சி நிற்பவை.

மேல்தோன்றும் வேற்றுமை பொய்யென்றும் உள்ளிருக்கும் ஒற்றுமையே உண்மையென்றும் அறிவது அறிவு. இந்த அறிவு சடசாஸ்திர ஆராய்ச்சிகளாலும் தத்துவ விசாரணையினாலும் வரும். இரஸாயனம் (Chemistry), சட சாஸ்திரம் (Physics), வானசாஸ்திரம் (Astronomy), கணிதம் (Mathematics), உயிர்ப்பொருள் சாஸ்திரம் (Biology), சரித்திரம் (History), போன்ற சாஸ்திரங்களில் அடையும் தேர்ச்சி, அகிலகோடிகளில் காணும் தோற்றங்களி னிடையே ஊடுருவித் தங்கும் ஒற்றுமையை விளக்கி அறிவுறுத்த, மதவிசாரணைகளும் தத்துவ விசாரணையும் அவ்வறிவைத் தெளியவைத்துப் பலப்படுத்தும்.

இந்தச் சாத்திரங்களெல்லாம் அறிவு நூல்கள். அவை கல்வி நூல்கள் ஆகா. கல்விநூல் என்பன, காவியம் சங்கீதம் நடனம் சித்திரம் சிற்பம் ஆகிய நுண்கலையின் விகற்பங்கள்தாம். பாஷைப் பயிற்சி, வர்த்தக முறை, விவசாயச் சாதனங்கள், தொழில் பழக்கம், தனதாயம், அரசியல், ஆகிய இவை போன்ற பயிற்சிகளையும் கல்வியென்றும் அறிவென்றும் விரவிச் சிலரும், கல்வியறிவென்று தொகுத்துச் சிலரும் நினைப்பா ராகின்றனர். இவை கல்வியும் அல்ல, அறிவும் அல்ல. இவைகளும், எந்திரச் சாகசங்களும், இவைபோன்ற பிறவும் பழக்கத்தாலும் முயற்சியாலும் வயிறு வளர்ப்பதற்கு அமைந்த சாதனங்களே யன்றி வேறுமோ! மற்றபடி, நுண்வலை பின்னி இரைபடுக்கும் சிலந்தியும் மிகுந்தகல்விமானும் அறிவாளியும் ஆகிவிடுகின்றது.

ஆதலால், கையாலும் எந்திரத்தாலும் தொழில் செய்து பொருள் விளைக்கப் பழகும் பயிற்சி அறிவன்று. அப்பயிற்சியைப் போதிக்கும் நூல்கள் அறிவு நூல்கள் அல்ல. விளைந்த பொருளை விற்று முதல் செய்தற்கு வழிகாட்டும் வர்த்தக முறைகளும் தனதாய விதிகளும் அறிவின் வகையைச் சேர்ந்தன ஆகுமோ! விற்று முதல்செய்த பணத்தை இடையூறின்றி அனுபவிக்கப் பயன்படும் விவகாரச் சட்டங்களும் வைத்தியத் தொழில்களும் அறிவாகா. மற்று, முன் சொன்ன பொருள் ஆதாயத்திற்கு இன்றியமையாதெனக் கருதப்படுகின்ற அரசியல் முறைகளும், அம்முறைகளை நடத்தி வைக்கும் சூழ்ச்சியும் அறிவென்று எண்ணுதற்கு ஒண்ணாது.

உலகிலே காணும் எல்லா வஸ்துக்களும் ஒன்றே எனக் காட்டி வேறுபாடு ஒழிப்பதே அறிவு. இரஸாயனம் சடம் வானசாஸ்திரம் கணிதம் உயிர்ச் சாஸ்திரம் சரித்திரம் முதலிய நூல்கள், அவ்வொற்றுமைத் தத்துவத்தை விளக்கித் தருகின்ற தன்மையிலே மாத்திரம் அறிவு நூல்களாகும். அவ்வாறின்றி அவைகளைக் கொண்டு எந்திரமும் மருந்தும் புதியனபுதியன படைத்துப் பொருள் செய்யப் புகுகின்ற காலையில், அவைதாம் அறிவு நூல்கள் எனும் தன்மையழிந்து சிலந்திவலைச் சாஸ்திரங்கள் எனவே முடிந்து விடுகின்றன என்பதை ஒரு போதும் மறக்கலாகாது.



# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## ஆற்றுப் படலம்.

T. N. சேஷாசலம் B. A. B. L. (7-வது பக்கத் தொடர்ச்சி)

### ஓடு மோடையில் வேத மோதுதல்.

பெய்தமழை வெள்ளமாகத் தழைப்பது இயற்கை முறையில் அடுத்து வரும். அந் நிகழ்ச்சியை, 'ஞானம் உன்னிய நான்மறையாளர் கைத் தான மென்னத் தழைத்தது நீத்தமே,' எனும் உவமையுள் கம்பர் அடக்கிப் பாடினர். [ஞானம்=மெய்யறிவை, உன்னிய=உணர்ந்த, நான்மறையாளர்=நான்கு வேதங்களையும் கற்றவர்களது, கை=கைகளில் கொடுத்த, தானம் என்ன=தானத்தைப் போல், நீத்தம்=வெள்ளமானது, தழைத்தது=பயன்தரப் பெருகியது]. மறையவர்க்குக் கொடுத்த பொருள் பெற்றவர்க்கு மாத்திரம் பயனளிப்பதுடன் நில்லாமல் அவர் மூலமாய் எல்லோர்க்கும் பயன் விளைத்துப் பெருகும் எனும் உண்மையைக் கொண்டமைந்த உவமை யிது. மழை பெய்தால் வெள்ளம் பெருகும் என்பது யாவரும் அறிந்ததே, ஆனால் நல்லோர்க்குக் கொடுத்த பொருள் பயனால் பெருகும் என்பது உலகறி விஷயமன்று. தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குவது போக, யாவரும் அறிந்த வெள்ளப் பெருக்கெனு மொன்றைச் சொல்லவேண்டிய சந்தர்ப்பத்தை வீணாக்காமல், அறிந்திராதார் அறியும் பொருட்டும், அறிந்திருந்தவர் நினைத்துணரும் பொருட்டும் விபரீத உவமையாக வோர் உண்மையைக் கவி விளக்கிக் காட்டுவாராயினர். வாயளவில் நூற்களை மாத்திரம் ஓதிய வேதியரும், அந்நூற்களின் பொருளை விட்டுவிட்டுத் தம் பிறப்பை மாத்திரம் பார்க்கும் பார்ப்பாரும் தானத்தின் பலனைப் பெருக்குவரோ அல்லரோ வெனும் ஐயம் தீர்வதற்குத்தான் 'ஞானம் உன்னிய நான் மறையாளர்' எனும் அடைமொழிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. 'பாத்திரமறிந்து பிச்சையிடு.' அல்லது "துஷ்பாத்திரதானேன புனர்தரித்ரஹ" என்னும் மூதுரைகள் துட்டனுக்குக் கொடுப்பதால் கொடுப்பவனுக்குப் பாவமும் தரித்ரமும் நேரும் என்ற நோக்கத்தோடு வழங்கப் படுமாயின் அவை கேவலம் உலக அனுபவத்திற்கு ஒப்பினும் ஆன்ம தர்மத்திற்கு ஒவ்வா. மற்று, நல்லவர்க்குக் கொடுத்தால் பெற்றவனோடு பிறர்க்கும் நன்மை மிகும் என்று, கொடுப்போன் ஏற்போன் இருவர்க்கும் அயலாரைக் கருதிச் சொன்ன வாக்கியங்கள் அவையாயின் மிகச் சிறந்தவை என்பதற்கு ஐயமும் இல்லை.

'நல்லோர்க் கீந்த கொடை நன்மையிற் பெருகும்', என்னும் இவ்வுண்மை உவமையாய் வழங்குகின்ற விதத்தைக் கம்பருக்கு முன்னும் பின்னும் பார்க்கப் புகுந்தால் ஒரு சரித்திரம் தோன்றுகின்றது.

ஆபுத்திரனுக்கு ஒரு காலத்தில் சிந்தாதேவி யளித்த அமுதசுரபி என்னும் வற்றாத பாத்திரத்தை மணிபல்லவத்தில் மாதவியின் மகள் மணிமேகலை பெற்றுவந்து, கற்பிற்சிறந்த ஆதிரை என்பாள் கைநின்று பிச்சை யேற்றதும், அப்பாத்திரம் நிறைந்து எத்தனை எடுத்தாலும் குறையாமல் உணவு ஊறித்தரும் தன்மையதாக, மணிமேகலை காவிரிப்பூம்பட்டினத்துள்ள வறியோர்க்கெலாம் வரையிலாது அளித்து உவக்கச் செய்தனள். இச்செய்தியைச் சாத்தனார் "மணிமேகலை" என்னும் நூலில் இவ்வாறு கூறினர்:—

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
அறத்தி னீட்டிய வோண்பொரு ளறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல
வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்றொலை வில்லாத் தகைமை.........

'நான் மறையாளர் கைத்தான மென்ன தழைத்தது நீத்தமே' என்பதனின்முன் கம்பரது நினைவிற்கு மணிமேகலையின் இவ்வடிகள் வந்திருக்கலாம். 'அறவோன் திறத்து' என்று இங்கிருக்கும் தொடரும், "அந்தணரென்போர் அறவோர்" எனவரும் குறளும் கம்பர் நினைவில் கலந்து, அந்தணருக்குச் சாதிக்குறிப்பில் வழங்கும் 'மறையோர்' எனும் மறுபெயராகி, நான் மறையாளர் கைத் தானம், என முடிந்திருப்பதும் இயற்கையே. தனக்கு முன்னிருந்த நூலினின்று எடுத்தமைத்த உவமையில் கம்பர் பொருத்தமும் பயனும் வழுவாமற் காத்தார். ஆனால், கம்பரது செய்யுளை நினைவிற் கொண்டு எழுதிய வில்லிபுத்தூராருக்குச் சிறிது அற்றம் நேர்ந்தது. நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கத்தில் அர்ச்சுனன் எய்த அம்பு ஒவ்வொன்றும் கோடி கோடியாய்ப் பெருகியதற்கு அக்கவி நான் மறையாளர் கைத் தானத்தையே உதாரணமாக்கினார்.

ஆய்ந்தநூலறிஞர்க் கீந்த
வரும்பொரு ளென்ன மேன்மேல்
வேந்தர்கோன் பகழி யொன்று
கோடியாய் விளைந்த தெங்கும்.

என்றனர் வில்லிபுத்தூரார். இதனில், 'ஆய்ந்தநூல் அறிஞர்க்கு ஈந்த அரும் பொருள் என்ன' என்னும் தொடர், 'நான்மறை யாளர் கைத் தானம் என்ன' என்னும் கம்பர் வாக்கே வேறு மொழிகளால் வந்திருப்பதால், பின்னதன் நினைவே முன்னதாய்ப் பிறந்திருக்க வேண்டுமென் றெண்ணப் பெரிது மிடமுளது. ஆக்கத்தின் பெருக்கத்திற்கு அடையாளமான வொன்றைப் பாரத கவி அழிவின் நிமித்தம் உபயோகப் படுத்திய குறையை இங்கு எளிதிற் காணலாம். கம்பரைத் தொடர்ந்து முன் முகிலின் நிறத்தை மாற்ற முயன்ற புலவர்களின் வரிசையில் வில்லியும் இதனால் சிறிது இடந் தேடுகின்றார்.

கொடுப்போர் ஏற்போர் கொடை, இம்மூன்றினது இலக்கணம் இதுவெனக் கம்பர் எடுத்துக் காட்டுமாறு பெய்து பெருகிய மழை, பிறகு வெள்ளமாய்த் திரண்டு மலைநின்று வெகு வேகத்தோடு பாய்ந்திறங்குகின்றது. அடிவருடித் தலைதடவித் தன் காம நாயகன் கைப்பொருளைக் கவரும்வரை யிருந்து பின் பறந்தோடி விடுகின்ற பரத்தையர் போல், மலையின் முடியையும் அடியையும் தழுவிப் பின் பக்கமும் புல்லி அதன்கணுள்ள சந்தனம் இரத்தினம் தந்தம் போன்ற உயர்ந்த பொருள்களை யெல்லாம் அடித்துக்கொண்டு வெகு விரைவினிலகன்றது அவ்வெள்ளம்.

தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
நிலைநி லாதிறை நின்றது போலவே

மலையி னுள்ளவெ லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்ததவ் வெள்ளமே.

கடல்நீருண்ட மேகம் மழைபெய்ய அந்நீத்தம் பெருகி வெள்ளமாய்ப் புரண்டு மலைநின்றிறங்கி இனி ஆருகப் பாய்கின்ற காட்சியைக் கம்பரோடு காண்போம். தமிழ் நூற்களில் நிலத்தை அதன் தன்மைக்கு ஏற்றவாறு நான்கு விதமாய்க் கூறுவது வழக்கம். மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிஞ்சி யென்றும், புற்றரைப் பரப்பாயமர்ந்தும் காடாயடர்ந்தும் இடையர்க்குரிய பாகத்தை முல்லை யென்றும், ஊரும் ஊர் சேர்ந்த இடமுமாய் உழுவதற்குரிய நிலத்தை மருதம் என்றும், கடலும் கடல் சேர்ந்த இடத்தையும் நெய்தல் என்றும் அழைப்பர். [அந்த அந்த இடங்களில் சிறப்பாகக் காணும் குறிஞ்சிப்பூ முல்லைப்பூ மருதப்பூ நெய்தற்பூ ஆகிய மலர்களைக் கொண்டு முறையே அவைகளுக்கு அப்பெயர்கள் வந்தன. உலகிற்கு நால் நிலம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் இதுவே. இந்த நிலங்களில் ஏதேனு மொன்று தன்னிலை குலைந்து அழிந்திருக்குமாயின் அதற்குப் பாலை என்று பெயர். ஆகையால் நிலம் ஐவகை என்று சொல்வாருமுளர்.] சரயுவெனும் பெயரோடு இவ்வைவகை நிலத்தினும் பாயும் இவ்வாற்றைப் பல உவமைகளால் நம் கவி வர்ணிக்கின்றனர். மலை விட்டு அது பாய்ந்து இறங்கும்போது குறுஞ்சியில் வேசியை ஒத்த விதம் முன் கண்டோம். இனி அங்குச் சொன்னபடி மணியும் பொன்னும் மயில் தோகையும் யானைத் தந்தமும் அகிலும் சந்தனமும் (இவை யெல்லாம் குறிஞ்சி நிலத்திற்கு உரிய பொருள்கள்) அந்த நதி சுமந்து சென்றதால் உயர்ந்த பொருள்கொண்டு ஊரூராய்ச் செல்லும் வணிகரை யொத்தது. பலநிறப் பூக்களும் மகரந்தப் பொடியும் பொன்துகளும் தேனும் யானை மதமும், கலந்து மிதப்பதால் தோற்றத்தில் அது வானவில்லை நிகர்த்தது. போகின்ற வேகத்தில் மலைகளை யுருட்டியும் மரங்களைப்பறித்தும் எட்டிய பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு கடல் நோக்கி மண்டலால், பின்னுள் கடலிற்கு அணையிடத் தாவிய குரங்கின் கூட்டம் போன்றுயது. ஈயும் வண்டும் தன் மேல் மொய்க்க வரம்பு கடந்து உற்சாகம் மிகுந்து உள் தெளிவு இல்லாமல் செல்கின்ற சரயுநதி ஒரு சமயம் கள் குடியனுக்கும் சமான மாயிற்று.

குறிஞ்சியில் இன்னவிதம் பாய்ந்த யாறு, பாலை நிலத்துள் புகுந்து அங்கு வசித்திருந்த வழிபறிக்கும் தொழிலுடைய எயினரது ஊரை யெல்லாம் வெள்ளப் பெருக்கால் அழிப்பதுடன், அவர்கள் வில்களையும் அம்புகளையும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போவதால், கள்ளர்குடி அடக்கும் ஓர் அரசனது சேனைக்குச் சமமாகிப், பின் இடையர்வாழும் முல்லை நிலத்தை யடைந்து வெள்ளம் பெருகி அவ்விடையர்தம் வீடுகளுக்குள் நுழைந்து தயிரும் வெண்ணெயும் உறியொடு வாரியுண்டு குருந்த மரங்களுக்கிடையே தவழ்ந்து, கோவியர்களது துகில்களையும் கவர்ந்து சென்று கண்ணனேயோ இந்நதி என்னும்படி ஆயிற்று. மருதம் சென்றபோது மள்ளர் தம் கதவினை முட்டி மதகுடைத்து ஆரவாரித்தோடும் மதயானையை நதிக் குவமையாய்க் கம்பர் கூறுகின்றார். சிலேடை நயத்தால் அங்கங்குச் சரயுவிற்கும் அதற்கு உபமானமாய்க் காட்டும் பொருளிற்கும் இக்கவி ஒற்றுமை சில ஊட்டுகின்ற விதத்தை விரிவஞ்சி இங்குக் கூறாது விட நேர்கின்றது.

பொதுவாக இந்த ஆறு உயிர்களுக் குதவியாய்ப் போற்றும் தன்மையைக் கம்பர் 'சரயு வென்பது தாய் முலை யன்னது' என்று புகழ்கின்றார். [இரகுவம்சம் என்னும் வடமொழி நூலில் சரயுவைச் செவிலித் தாய்க்குச் சமானமாகக் கூறி இருக்கக் கம்பர் அக்கருத்தைக் காளிதாசனிடம் வாங்கிச் சிறிது திருத்தி ஈன்றதாயே என்று அமைத்துக் கொள்கின்றார், ஈன்ற தாயிலும் செவிலித்தாய் ஓரளவு அன்பிற் குறைந்தவளென்பது பிரசித்தமாதலால்.] நால்வகை நிலத்தினூடும் பாயுங்கால் ஒன்றற்குரிய பொருள்களை வாரிக் கொண்டு வந்து மற்றொன்றில் ஒதுக்கிய காரணம்பற்றிக் குறிஞ்சி முல்லையாகி, முல்லை மருதமாகி மருதமும் நெய்தலாகி நானிலங்களும் தம்முள் தன்மை தடுமாற, மக்களை ஒரு கதியினின்று மற்றொரு கதிக்கு மாற்றிமாற்றிக் கொண்டு சேர்க்கும் வினையேபோல் சென்றதா லந்நதிக் குவமை விதியும் ஆயது கம்பர்திறம்.

இதுவரையில் இந்நதி சென்ற கதியைப் பார்த்தால் அது அடைந்த பல வேற்றுமைகளுக்குள்ளே ஒரு ஒற்றுமை விளங்கும். வேசிபோன்றவர் சிலர், வணிகராயவர் சிலர். வான வில்லெனப் பன்னிற ஆடையோடணிகளால் விளங்குவார் சிலர். கட்குடியர் சிலர். குரங்கினச் செய்கை வாய்ந்த குணத்தினர் சிலர். போர்வல்ல சேவகர் சிலர். கண்ணனுக்கு நிகராகக் காமலீலை புரிவார் சிலர். மதத்தொடு நடக்கும் யானைகளனையவர் சிலர். வாழ்க்கை நிலையாலும் செய்கை குணங்களாலும் மானிட இனத்தார்க்குள் தோன்றும் வேற்றுமை இவை. எனினும், வெளியுருவும் புரிசெயலும் வினையின்பயனால் புகுந்து செல்லும் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ற தோற்றங்களே யன்றி அவைதாம் ஆன்மாக்களல்ல. இடையறாது ஒழுகுகின்ற அந்நதி ஒன்றினின் றொன்றாகச் செயல் குணமாதி வகைகளில் மாறுபாடடைகின்ற தானாலும், செல்லுறுகதியிற் செல்வது நீர் ஆகிய வொன்றே. ஆதலால் மனிதர்களைத் தீயர் என்றும் நல்லர் என்றும், காமுகர் என்றும் தூயரென்றும்,குடியரென்றும் மதுவிலக்கியவரென்றும், வேண்டியவர் வேண்டாதாரென்றும் இன்னும் இவ்வித் வேற்றுமைகளால் பாகுபடுத்திப் பார்ப்பது அரைப்பார்வை. அவ்வரைப் பார்வையும் வெளிப்பார்வை. நாடகமேடையில், மேற்கொண்ட வேடத்திற் கிணங்கக் கொலைநடித்த வொருவனைக் கொலைஞனென்றும், தவக்கோலம் கொள்வோனைத் தூயனென்றும் நினைத்து நாம், தூற்றுவதும் போற்றுவதும் அறிவாமோ! அவ்விதமே இவ்வுலகில் நல்லனென் றொருவனை மகிழ்வதும் தீயனென் றொருவனை இகழ்வதும் நகைக்கே ஒத்ததாய் முடியும். ஈதறிந்தால்,

"..................................ஆருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே."

என்று (புறநானூறு. 192) கணியன் பூங்குன்றப் புலவனுடன் பாடோமோ நாம்! கிறிஸ்தவவேதமும் இவ்வுண்மையைச் சிறப்பாகக் கூறும்.

ஆதலின், குணத்தையும் செயலையும் கழித்துச் சரயுவைக் கருதினால் முழுவதும் அதன்பால் என்றும் நிலைத்திருப்பது நீரேயாகும். வாழ்க்கை வேறுபாடொழிய இவ்வுலகில் எஞ்சிநிற்பது ஆன்மா. சரயுவென்பது தாய்முலையாதலால் அன்பென்பதொன்றே ஆன்மாவிற்கு இயற்கையா யமைந்த தத்துவம். அன்பேயாய அப்பரமான்மாவின் பாகங்களாகிய சீவான்மாக்கள் வேறுயாவதாயிருத்தல் கூடும்!

ஆன்மாவின் இயற்கைத் தன்மை அன்பே என்று இன்னவாறு காட்டிய கம்பர், அவ் வான்மாக்கள் குணங்



களால் செயல்களால் வேறுபாடு உற்றிருப்பன போன்று தோன்றிய தோற்றம் வெளித் தோற்றமே ஆவதுபோல் அவை தங்கியிருக்கும் உடலுருவங்களின் வகைகளாலும் வேற்றுமை பெற்றதில்லை. இங்கு நதியாய்ப் பாயும் சரயுவே வேறு நீருள்ள இடங்களினும் நீராயிருந்ததென்று உணர்த்துகின்றார்.

தாதுத சோலை தோறுஞ்
சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
புதுமணற் றடங்க டோறும்
மாதவி வேலிப் பூக
வனந்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு
முயிரென வுலாய தன்றே.

[மகரந்தம் தாவகின்ற பூஞ்சோலை அனைத்தினும், சண்பக வனங்க ளனைத்தினும், தாமரை போன்ற மலர் நிறைந்த தடாகங்க ளனைத்தினும், புதுமணல் நிறைந்த இடங்களனைத்தினும், மாதவி யென்னும் மரத்தை வேலியாகவுடைய பாக்குமரச் சோலைகள் அனைத்தினும், வயல்கள் அனைத்தினும், அந்நதியானது ஊர்வன நடப்பன பறப்பன நிற்பன என்று பாகுபாடு படுத்திக் கூறப்படும் சராசரங்களின் உடம்புகள் ஒவ்வொன்றினும் உலவும் உயிரைப்போல் உலவியது]

பாத்திரம் எவ்வடிவத்தை உடையதே யாயினும் அதனுள் தங்கிய நீர் சரயுவின் நீரே யாகும். ஆன்ம கோடிகள் அனைத்திற்கும் அவ்வாறே மூலப் பொருளாயிருப்பது அப் பரமான்மா ஒன்றே. இச்செய்யுளில் கண்ட பல இடங்களில் இருந்த நீர் சரயுவால் சிருட்டிக்கப்பட்டதன்று. சரயுவே அந்நீர்களுமாய் இருந்தது. ஆதலால் ஆன்மாக்களுள் செயலால் தன்மையால் மற்று அவை போர்த்திய உருவினாற் பேத மேதேனு மில்லை.

ஒரே மதத்தின் பல பிரிவினையாகிய சமயங்கள் தந்தெய்வம் எந்தெய்வம் என்று வழிபடும் கடவுளர்களைக் குறித்து வழக்கிடுமதை விலக்கி இந்த யாறு பிறப்பதன் முன்னேயே மேகமாய் ஒற்றுமை படுத்தியது. பின் அது, செயல் வகைகளால் காண்பது ஆன்மபேதம் அன்றென்றும் ஆன்மாவிற்கு இயற்கையாய் உரியதன்மை அன்பெனும் ஒன்றே என்றும் விளக்கியது. அதன்பின் மேற்செய்யுளால் சீவான்மாக்கள், எங்கும் நிறைந்த அப் பரமான்மாவின் பாகங்களே எனக் காட்டி சீவான்மாக்கள் ஒன்றற்கொன்று தனித்தனியாயும், அவையடங்கலும் ஒன்று சேர்ந்தும், அப் பரமான்மாவினின்று வேறுபாடின்றி இருப்பதுவும் கண்டோம்.

பேதமில்லாப் பெரு நோக்கே பெருகப் பிறந்து வழி நடந்த சரயுவைக் கம்பர் அன்னவாறே முடிக்கவும் முடிக்கின்றார். முதற் கடவுள் பரமான்மா, என்னும் இத்தத்துவத்தைப் பல மகத்தவர்கள் தனித்தனி ஆராய்ந்து இன்னதே அதனுண்மை ஆதலால் மற்றதெல்லாம் பொய் என்பார்க்கும், அந்தத் தத்துவ அறிவை ஏற்று உலகிலே பரவச்செய்த வெவ்வேறு மதாசாரியர்கள் காட்டும் வழி வெவ்வேறென்று சீர் தூக்கிச் சிறப்புக் கூறுவோர்க்கும் அறிவுறுத்த, 'வேற்றுமை யில்லையே யில்லை என்று' விளம்பிய வாங்கே கோசலம் புனைந்த ஆறு கடலோடு கலக்கின்றது:—

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலு
மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி லொன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
பொருளும்போற் பறந்த தன்றே.

[மலையினிடத்திலே பிறந்து வந்து கடலோடு கலந்த சரயுநதி, முதலில் ஒன்றே ஆயினும் பலவேறு துறைகளில் பலவாறு பரவிய தன்மையினால், ஆதியில் ஒன்றாக இருந்தாலும், அளவற்ற வேதங்களாலும் 'இதுவே, யென்று இயம்புதற்கியலாதிருக்கப் பற்பல பெரும் சமயங்கள் தமது தமது எனப்பிரித்துக் கூறுதற் கிலக்காய அப் பரம்பொருளும்போல் பரந்து.]

'பொருளும் போல் பரந்தது' என்னும் வாக்கியத்திலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. கடவுளர் என நீரமாறி, வாழ்க்கையென வழி நடந்து, உயிரென உலவிக் கருமமென நிலைமாற்றி வந்து கடற்கரையில், சமயகோடிகள் காட்டும் மார்க்கங்களுக்கும் அச்சமயங்கள் யாவற்றிற்கும் மூலமாய பரம்பொருளிற்கும் கூட ஒப்பென முடிந்ததென்றார் நம்மரும் புலவா. இச்செய்யுளில் இரண்டு தனி உவமைகள் கருத்திற் கலந்திருக்கின்றனவென்று எண்ண இடமுளது. கடலைப் பரமான்மாவாகக் கொண்டு அதனின்று பிரிந்துலவிய ஆன்மகோடித் திரள்களாக நதியைக் கருதிப் பின் அவை அப் பரம்பொருளையே சென்றடைந்து இரண்டறக் கலக்கின்ற கொள்கை யொன்று: அல்லது கடலை அருட்பெரும் ஆதிமூலமாகக் கொண்டு, அவ்வருளின் தத்துவத்தை ஏற்று மதக்கொள்கைகளாக உலகிற் கனுப்பும் மதாசாரியர்களை மலைகளாகக் கருதி, அவர்களால் நிலவுகின்ற சமயங்களை நதிகளாக நினைத்து நதிகளும் அவை பிறக்கும் மலைகளும் அவை பாயுமிடங்களும் வெவ்வேறாயினும், எல்லாம், ஒரே கடலினின்று எழுந்து மீண்டுமக் கடலையே சேர்வது போல், சமயங்கள் வேறாகத் தோன்றினும், அவைகளை நாட்டிய சமயாசாரியர் வேறுவேறாயினரேனும், அச்சமயங்கள் நிலவும் தேயங்களில் பேத முண்டெனினும், எல்லாச் சமயங்களும் ஒரே பொருளினிடத்திலிருந்து பிறந்து மீண்டுமப்பொருளையே அடைகின்றன என்னும் உண்மை, இரண்டு: அல்லாது, இங்கு முன் உரைத்த வண்ணம் நதியே பரம்பொருளென்றும் அந்நதியின் நீரானது பல இடங்களில் பிரிந்து தங்கினால் தங்கிய இடந்தோறும் அப்பொருளையே காண்கின்றோமென்பதும் பெற்றிருக்கின்றோம். சரயுவின் கதியினை வர்ணிக்க வரும் உவமைகளினின்று இத்தத்துவ உருவகங்கள் காணக்கிடக்கினும் முற்றிலுமிப்படலம் தொடர் உருவகம் (allegory) அன்று என நினைவூட்டுதற்குப் 'பொருளும் போல்' என்பதினுள்ள எச்சவும்மை உதவியாகும்.

பொய்த் தோற்ற மாறுபாடுகளைப் பிய்த்தெறிந்து நடு நின்ற மெய்யெனும் ஒன்றைக் காணவும் காட்டவும் வல்லார் கம்பரனைய கவிச் சக்ரவர்த்தியா யிருப்பவர்கள் தாம். அன்ன மெய்ம்மையைக் காட்டுதற்கும் இன்னவர்க்குப் புதிய சாதனங்கள் வேண்டா. பிரபஞ்ச மனைத்தையும் தன்னுளடக்கிப் பிரபஞ்ச மடங்கலும் தானேயாய் மாறிப்புகும் புலவர்க்கு எப்பொருள் அரியது. எண்ணுதற்கும் சொல்லுதற்கும் அருமையாய தத்துவங்களை அவர் காண்பதற்கு, நீரென நாமெல்லாம் தினம் நினைக்கும் ஆறுகாட்டும் கண்ணாடி யொன்று போதாதா! கம்பர் எழுதிய இவ்வாற்றுப் படலத்திற்குத் தலைப்புக் கொடுத்தாரோ அவரென எண்ணும்படி ஆங்கில இலக்கியத்தில் அரசுவீற்றிருக்கின்ற ஷேக்ஸ்பியர் மகாகவி "ஓடையில் வேதமும் கல்லினில் உபதேசமும், பெறலாகும்மே'(Books in running brooks and sermons in stones) என்று செப்பிய உரை சிந்தித்தற் கொத்தது. ஓடும் ஓடையில் ஒதிய வேதியர் இவர் உவந்து தந்த தத்துவ நீத்தத்துள் திளைத்தாடுதல் எக்நாளும் நன்று.

# காந்திமதி

## என்னும்

## காந்தாரநாட்டுக் கட்டழகி.

T. N. சேஷாசலம். B. A. B L.

### 1. கோயில் தரிசனம்.

(12-வது பக்கத் தொடர்ச்சி)

"ஆயுதமெல்லாம் அவனிடமே யிருக்கட்டும். எனக்குப் பாணி போதும். என்ன, கந்தா நீயேன் இப்படிப் பயப்படுகின்றாய்!"

"பயமா! நன்றாய்ச் சொன்னீர். என் பயத்தைச் சோதிக்கின்றீரோ!" என உரைத்துக் கந்தன் பின்புறம் திரும்பிக் கையுந் தடியுமாய்ப் புறப்பட்டான். அவனைக் கருணாகரர் பிடித்து நிறுத்திக்கொண்டு, "அடெ அசடா" ஓடினா லோடுவது இல்லாவிட்டால் முட்டிப் பாய்வதுதானா தரம். உனக்குத்தான் எந்த வகையிலும் மிதமென்பதே இல்லையே. நல்லது நீ யுன் கைக் கம்பை என்னிடம் கொடுத்துக் காந்தியுடன் விரைந்துசெல். நான் பின்னால் வருகிறேன். வீடின்னு மெட்டடியிருக்க நமக்கென்ன விபத்து நேரக் கூடும்," என்று அவர் காந்திமதியைக் கந்தனுடன் முன்னனுப்பி விட்டுப் பின்புறமாய் வந்து "யாவனோ என்னுடன் நிழல் பூச்சி யாட நேர்ந்துளாய்," என்று உரப்பிச் சிறிது தாழ்ந்து, மறுபடியும், "எதிரே வா, இல்லையேல், இரவு நோக்கிப் பேய்போல் பதுங்கித் திரியும் நீ பூசாரியின் பிரம்பிற்கு இலக்காவாய். வெளிவந்து உன் சுயரூபத்தைக் காட்டுகின்றனையா என்ன!" என விளித்து நாற்புறமும் நோக்கிநின்றார்.

அப்பொழுது, "ஆகா, கருணாகரரே, வருவதற்குத் தடையில்லை. காண்போர் கண்ணிற்கு இனியதோர் உருவமல்லவே எனது என்பதை எண்ணித்தான் ஏங்குகின்றேன்" என வொரு ஆழ்ந்த குரல் எதிராகக் கருணாகரர் காதிற் பட்டது. இக்குரல் தான் பண்டு கேட்டுளதே என்றவர் சிறிது சிந்திக்குமளவில் அக்குறற் குடையோனும் வந்தெதிர் தோன்றினான். அன்னவனைப் பார்த்துக் கருணாகரர், "ஓஹோ! கலாநாதா நீயே யிங்ஙனம் கரந்துடன் தொடர்ந்தது. எங்ஙனம் வரினும் உன் வரவு நல்வரவாகுக," என உளமகிழ்ந்தியம்பி அவன் கைகளைப் பற்றிக்கொண்டு, "காந்தி வீடு சேர்ந்து விட்டனள். நீயும் வா. நின்னைக்காண அவள் பெரு முவகையளாவாள் திண்ணம்," என வீட்டிடம் அழைத்தேகினர்.

கலாநாதனும் இரத்தினபுரி வாசிகளுள் ஒருவன். தொழிலில் வில் வேல் வாள் கவசம் கேடயம் ஆகிய போர்க்கருவிகள் செய்யும் செல்வக் கம்மியன். இவன் சிறுபோதே பெற்றோரை இழந்து உத்தமச் செவிலித் தாயொருத்தி யெடுத்து வளர்க்க வளர்ந்து இப்பொழுது ஈன்றவளே போலவளைப் பாராட்டி வந்தான். வயதோ இருபத்தெட்டாண்டு எட்டி யிருக்கலாம். வடிவழகில் இவன் இணையற்றவன் என்று எண்ணுவதற்கில்லையாயினும் மார்பினதகலமும் தீரப் பார்வையும் தசைவலி கொண்ட அவயவங்களின் திரட்சியும் களங்கமற்ற முகமும் காட்சிக்கு இன்பத்தைத் தரும் தன்மையவாயமைந்திருந்தன. உருவமும் மிக்க உயர்ந்ததன்று, ஆனால் குள்ளனுமல்லன். வாமனன் என்றவனது நண்பர் அழைப்பதெல்லாம் விளையாட்டு வகையைச் சார்ந்ததே. நெற்றி நிமிர்ந்து பரந்திருத்தலால் கலாநாதன் புத்தி விசாலமுள்ளவன் என்பது எளிதில் விளங்கும். இக்கம்மியன் போர்க் கருவிகளைப் பண்ணுவதோடு நில்லாது அவைகளைப் பயில்வதிலும் பேராற்றல் உடையவன்.

கருணாகரரும் அவர் அழைத்துவந்த விருந்தும் மனையகம்புகக்கண்ட கந்தன் முகம் சுளித்து அகன்று மேன்மாடிக் கேகிவிட்டனன். காந்திமதியோ சிறிதளவு நாணிக் கதவண்டை நின்றாள். அவளைப்பார்த்துக் கருணாகரர், "என்ன, காந்தி, நாள் பல கழிந்தும்-நாதன் மீளவே வரவுகூறாமல் நீ நாணி நிற்கின்றனையே," என்று சொல்லிக்கொண்டே கலாநாதன் பக்கம் திரும்பி, "நாதா நின்னை மீண்டும் காண யான் உள்ளத்தடங்கா உவகையனா யிருக்கின்றேன். என்னை நீ இத்தருணம் எது கேட்பினும் தந்தேன்," என்று காந்திமதியைக் கடைக்கண்ணாற் பார்த்துக்கொண்டே புன்னகையுடன் தூண்டினார். கலாநாதன் காந்திமதியின் முகத்தை நோக்கினான், அவளும் தரைநோக்கி நின்றாள். கருணாகரரும், "ஆம், கேட்டபின் கொடுத்தல் என் குலத்திற்கு இழுக்கென்பதை மறந்தேன்," என்று சொல்லிவிட்டு வேலைக்காரி தனபாக்கியத்தைக் கூவியுணவிற்கேற்றன சமைக்கச் செய்தனர்.

உணவருந்த விருவரு முட்கார்ந்தபோது கந்தன் அவ்விடமில்லாததுகண்டு கருணாகரர் சலித்து, "என்ன! வந்த விருந்திற்கு முகங்கொடாது தன்னறை புகுந்தடைவதும் பெருங்குன்றத்துச் செருக்கோ..... எங்கவன் கந்தன்" என்று வினவக் காந்திமதி "தலைநோயென்று தன்னறை மேவினன்" எனக் குரல் தாழ்ந்து செப்பினாள். "திருட்டுத் தலைவலிக்கிடந்தரேன் இழுத்துவா அவனை," என்று கட்டளையிட்டனர் கருணாகரர். தனபாக்கியம் படியேறி மாடிமீ தோடினாள். அங்குப் போய்க் கந்தனிடம் யாது புகன்றனளோ அறியோம், அவன் முகங்கருகி முணுமுணுத்துக் கொண்டே கீழிறங்கி வந்து தனுக்கிட்ட இடத்தில் வேண்டா வெறுப்புட னுட்கார்ந்தான். எனினும் உணவொன்று மருந்தாது தலைகவிழ்ந்திருந்தனன். இதுகண்ட கருணாகரர், "ஏது கந்தா, மனையடங்கலும் மகிழ்ந்திருப்பதற்கான இந்நேரம் நீ துன்பம் கொண்டாடுவது! அன்னம் அருந்துவாய்... இல்லை யெனில்..."எனச் சொல்லி வரும்போது கந்தன், "பசித்தவர் புசிப்பார்...என்னையிங்ஙனந் தகைதல் விடுமின்"என்றனன். கருணாகர் கண்கள் தீப்பொழியக் கையுதறினர்: காந்திமதி கலக்கங் கொண்டு கந்தனைக் கருதி இமைப் பொழுது நோக்கினள். இப்பார்வை தன் கண்ணிற் கெட்டியதுங் கந்தன் பெருமூச்செறிந்துணவையும் சிறிதருந்த முயன்றான்.

உண்டியு முடிந்தது. வெற்றிலைத்தட்டுடன் நிலாமுற்றத்தி லுட்கார்ந்தனர். பேச்செல்லாம் பெரும் பகுதி கலாநாதன் வர்த்தக நிமித்தமாய்ச் சென்றிருந்த பல தேசங்களைப் பற்றியதாகவே இருந்தது. "மகனே, வாமன, நீயுலகளந்து சென்றதால் நம் குண்டலினியன்றிப் பல நதிகளையும் இரத்தினபுரி கிடக்கப் பிற நகர்



களையும் கண்டு வந்துளாய். உனது யாத்திரை யோகத்தைப் பாராட்டுகின்றேன்." என்றார் கருணாகரர்.

இவ்வுரைகேட்கக் கலாநாதன், "என்னுரைப்பது, இந்நதியும் நம் நகரும் நிகரற்ற சிறப்பு வாய்ந்தன வென்பதைக் கண்கூடாய்க் கண்டேன். யான் சென்ற விடமும் கண்டகாட்சிகள் பலவேயாயினும் ஐய, கார்தொடு நெடுமுடிக் கனக மாமதில், பார்நடுகுடைந்த பொற்புறுகிடங்கு சூழிச் சீருடைய யொருநகர் சேர்ந்து வாழவே உம்பரும் உரகரும் தவம்பேணும் இம் மணிப்புரி யான் மீளுமளவும் புயற்காற்றில் மொத்துண்டு அலமரும சிறுகுருவி தன் கூட்டிற் கலைந்து தவிக்குமாறுபோல் சொல்லலுற்றுழன்றேன்... ஆதலால்..." என்று சொல்லி வருகையிற் கருணாகரர், "ஓகோகொ! கலாநாதா, செய்யுள் நடையில் துவக்கி எப்படி எப்படியோ போகின்றனையே. யாப்பு எல்லாம் எங்கேமறந்தாய்!" எனச் சிரித்தார்.

"மறக்கவில்லை. ஆனால் துருத்திக் காற்றும் சம்மட்டியடியுந்தான் யாப்புத்தளையை இடையிடையில் சிதைத்துவிடுகின்றன. எனினும், என்ன செய்வது. பாட்டுக் கெட்டாலும் பணம் தேடத்தானே வேண்டியிருக்கிறது."

"என்மகனே, அதுசரி. இந்தப் பிரயாணத்திற் பணலாபத்திற்குக் குறைவில்லையே."

"நல்ல லாபம். சென்ற விடமெல்லாம் என் பண்டத்தை மதித்து வாங்கினர். ஆனால் அவ்வற்பப் பெருங்குன்றத் தலைவன்தான், ஒரு வருடகாலம் மெய்வியர்க்க யான் தீட்டித்திருத்திய எஃகு வாளைப் பாதிவிலைக்குக் கேட்டான். அக்கள்வனுக்குக் காண்பதெல்லாங் கொள்ளைப் பொருளாய்த் தோன்றுகிறது போலும்!"

எனக் கலாநாதன் சொன்ன வார்த்தைகளைச் செவியேற்ற கந்தனது கைகள் துடித்தன. கம்மியனை அவன் கறுவி நோக்கினான். அப்பொழுது கருணாகரர், "கந்தா உன் வேலையைப்பார். குன்றத் தலைவனுக்கிழைத்த இந்நிந்தனையை நீயேற்றுச் சீறுவானேன் சிறுவ! எங்கள் பேச்சிற்குச் செவி கொடாதே." என்று வெறுப்புடன் உரைத்தாரெனினும், காந்திமதியின் கடைக்கண் பார்வை யவனைத் தீண்டுகின்ற வரையில் கந்தனோ குருவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. கலாநாதன் சிறுவனது செயல்களைச் சிறிதும் மதியாது, "இது கிடக்கட்டும், விடுங்கள். நான் எடுத்துச்சென்ற வாள் வேல் கவசகேடகங்களைப் பல இடங்களில் நல்லவிலைக்கு விற்றேன். கலிங்கத்தவர் விசயதானுடன் மறுபோர் எடுக்க மதித்துளாராம். அதற்காகப் படைத்தலைவ ரெல்லாம் எனது கருவிகளையே ஏற்றனர். இன்னும் மத்திரர்........" என்று ஆர்வத்துடன் சொல்லி வருகையில் கருணாகரர் மறித்து,

"இருக்கட்டும், கலாநாதா, நீ பொன் பெற்றதைச் சொன்னாய், நீ கொடுத்த புண்களையும் கூறிவிடு - சொல், நாதா, உண்மையைச் சொல். நீ குண்டலினியைக் கடந்தது முதல் இரத்தினபுரி திரும்புகின்ற வரையில் எத்தனை பேருடன் செருவிளைத்தாய் சொல்?" என வினவினார்.

"காந்திமதியின் எதிரிலா கேட்பது? கத்திமுதல் கேடகம் வரையில் எல்லாம் செய்கின்றேன், உண்மையே. ஆயினு மவைகளைக் கையாள்வது மற்றவர்களே யன்றோ? உலையிற் காய்ச்சும்போதுஞ் சாணையில் தீட்டும்போதுந் தவிர நான் கத்தியை ஒருபோதும் கைக்கொள்வதே யில்லையே. மற்றுச் சண்டை சச்சரவுப் பழிகளெல்லாம் என்மீது சார்த்தி உமது மகளிடம் பற்பல அவதூறு கூறியிருக்கின்றனர் இவ்வூரார். இந்த அபவாதத்திற்கு ஆஸ்பதமான கயவர்களெல்லாம் ஒரு பக்கமும் நான் தனியாய் எதிர்ப் பக்கமும் தனியிடத்தே சந்தித்தாலல்லவோ! ஆகா, அப்பொழுது தெரியும்."

"சரி, சரி, அப்பொழுது பார்க்கலாம் ஒரு பழியுமறியாத உன் சாந்தத்தை. நீ பண்ணி விற்றிருக்கும் கேடகங்களிற் பாதி உன்கை வாளாலேயே உடைத்திருப்பா யென்பதிற் சந்தேகமில்லை."

"என் கை செய்த வேலையை நானே சோதித்துப் பார்க்காமற் போனால் கவசத் தொழில்நுட்பம் யான் எவ்வாறு கற்பது. இல்லையெனில் தக்கையை ஒட்டிக் கேடகமென்று வெட்கம் கெட்டு விற்கும் அந்த மகத நாட்டுக் கம்மியர்கள் செய்யும் இழிதொழில் போலல்லவோ என் கை வேலையும் அமையும்!"

"ஓகோ! சரி! தெரிந்தது. மகததேசக் கம்மியனொருவனொடு இது காரணமாய் நீ சண்டை செய்திருக்கின்றா யென்பது வெளிப்படை."

இதற்குக் கலாநாதன் சிரித்துக்கொண்டே, "சண்டையா! இல்லை. இரத்தினபுரி வாசிகளின் கௌரவத்தைக் காக்கும் வண்ணம், அவனோடு ஏதோ சிறிது கைகலக்கவேண்டி நேர்ந்தது. அவ்வளவுதான். ஒரே தொழிலாளியுடன் பெரும்போர் புரியவும் புரிவேனோ!" என மொழிந்தான்.

"நல்லது, அந்தச் சகத்தொழிலாளி பாடு எவ்விதம் முடிந்ததோ?"

"எனது கைவேல் அவன் மார்பிற் சிறிது இடந்தேடி நுழைந்தது. அவன் பாடு முடிந்துபோய் விடுமென்று தான் அங்கிருந்தோர் சொல்லிக் கொண்டனர்."

"இவ்வளவேயோ வேறு எவ்விடத்திலேனும் நின் கத்திக்குக் கூர்பார்த்ததுண்டோ?"

"தென்னவனொருவனைச் சந்தித்தேன். 'என்மொழிக் கவிகளோ உன்மொழிக்கவிகளோ சுவைமுதிர்ந்தவர்' எனும் வார்த்தை வளர்ந்தது. இத்தகை வழக்கில் விட்டுத்தருவேனோ! தென்னவன் இடதுகால் பாதியாய்விட்டது"

"அதற்கப்புறம்?"

"வங்கநாட்டான்"

"வங்கநாட்டானுக்கு விளைந்ததென்ன?"

"வாட்போர்வல்லவன் அவனோ நானோ எனும் ஐயம் அவனைச் சந்தித்ததும் எனக்குண்டாயிற்று. சோதித்தாலன்றிச் சந்தேகம் தீர்வதற்கில்லை. அவனுடன் சண்டையிட்டேன். விரலிரண்டும் ஒருகாதும் தோலில் பெரும்பகுதியும் தொலைத்துவிட்டு அவனொழிந்தான்."

"ஐயமறக்கற்ற கலைஞன் கலாநாதன்! தொழில் சம்பந்தமாய்த்தவிர மற்றப்போதில் கத்தியைக் கையிலுந்தொடாத இந்தச் சிறுபிள்ளையைப் பாருங்கள்...... அப்புறம்,"

"பெருங்குன்றத்தவன் ஒருவனைப் பிண்டமாய்ப் பிடித்து எறிந்துவிட்டேன்?"

"பெருங்குன்றத்தவன் ஒருவனைப் பிண்டமாய்ப் பிடித்தெறிந்தது எதற்காகவோ?"

"எதற்காகவென்பது மறந்தேன். அவன் என்னெதிரில் வந்தான் அவ்வளவுதான் நினைவில் நிற்கின்றது."

காந்தியின் முகம் வாடியதைக் கருணாகரர் கண்டனர்போலும். 'நாதா நீ திக்விஜயம்செய்து மீண்டனை. இனிப் பரிவுதீரச் சிறிது பானகம் பருகுவாய்," என்று அவர் கூறிக் கந்தனிருந்த இடம் நோக்கிக் "கந்தா, எழுந்திரு, நம் கலாநாதருக்குப் பானகமெடுத்துவா. எங்களுக்குந்தந்து நீயுமருந்துவாய்," எனவிதித்தனர்.

கந்தனே கருணாகரருக்குங் காந்திமதிக்கும் பானகத்தை வார்த்துக் கொடுத்துப் பாத்திரத்தை வைத்துவிட்டான்.

"ஏனடா இது ! என் வீட்டில் நீ விருந்தோம்பல் கற்ற விதம் இதுதானே, கந்தா. கலாநாத ரவர்களுக்கும் பானகம் வார்த்துக் கையில் கொடுக்கா திருப்பாயாயின்......"

"கம்மியரவர்களுக்குத் தாகமுண்டாயின் தானே வார்த்துக் குடிக்கட்டும். என் தந்தைக்கு மகனான நான் இந்நாள்வரை யடைந்துள அவமான மத்தனையும் போதும்," எனக் கந்தன் வெகுண்டுரைத்து நெருப்பினின்று நீர் சொரிவதுபோல் அழுதுயிர்த்தான்.

இதுகேட்டுச் சிரிக்கத் தான் சிரித்த கலாநாதன், "ஏதேது! குட்டிநாய் நன்றாய்க் குரைக்கின்றதே. இருப்பினும் அவன் சொல்வது சரியே. வார்த்துக் கொடுக்காவிட்டால் எனக்கு எடுத்துக்குடிக்கத் தெரியாதோ!" என்று சொல்லிக்கொண்டே பாத்திரத்தைக் கையிலெடுக்க எத்தனிக்கையில், கருணாகரர் அவனைத் தடுத்துச் சிறுவன் கொண்ட செருக்கிற்குத் தரியாமல் அவனிருதோள்களையும் தன் கைகளால் பற்றிக்கொண்டு, "அடே, சிறுவா, சின மூட்டாதே. என்னுடன் இனி நீ யரைக்கண மிக்கூரையின்கீழ் நிலைக்க வேண்டுமாயின் இப்பாத்திரத்தைக் கலாநாதர் கையில் நீயே கொடுப்பாய்... ...மறுத்தியேல்" என்றுரைத்துத் தெழித்த மொழி முடியாமுன்னம், கந்தன் முகம் கோணி முணுமுணுத்துப் பாத்திரத்தை எடுத்துக் கலாநாதனது கையண்டை நீட்ட, நீட்டிய பாத்திரத்தைக் கலாநாதன் ஏந்தும்பொழுது பாத்திரம் கவிழ்ந்து பானகமெல்லாம் அவனது உடையில் ஓடிவிட்டது. இது கைதவறி நேர்ந்ததோ, அல்லது கந்தன்தான் பானகப்பழி தீர்த்துக் கொண்டனனோ வென்று கருணாகரர் சிறிது சிந்திக்குமளவில், கலாநாதன் கந்தனது தலைமயிரைப் பிடித்து ஒரு குலுக்குக்குலுக்கித் தூரத்தில் தள்ளிவிட்டு, "ஏ, குரங்கே, குட்டி நாயே, இந்தக் காரியம் மாத்திரம் நீ இவ்வீட்டிலல்லாமல் வேறெந்த இடத்திலாயினுஞ் செய்யத் துணிந்திருப்பாயானால் நினது தலையைக் கழுத்திற்குள் அப்பொழுதே அழுத்தியிருப்பேன். உன் சாதிப் பேய்களில பலர்க்கு அக்கதி என் கையால் கிடைத்திருக்கின்றது; ஆப்புதனை யசைக்காதே, குரங்கே," என்றனன்.

தூரத்தில் போய்விழுந்த கந்தன் சீயக்குருளைபோல் சீறி யெழுந்து, "மற்றுமொரு உரை யென்னை நீ இளிவரக் கூற யான் இடந்தரேன்," என முழங்கி மடியிலிருந்த சிறிய உடைவாளொன்றை யுருவிக்கொண்டு கலாநாதனின் மார்புமீது பாய்ந்தான். கலாநாதனுக்கு இது ஒரு பொருளா! ஒரு நொடியில் கத்தியைத் தடுத்து எறிந்துவிட்டுக் கந்தனது கழுத்தைத் தன் கையெனும் இடுக்கியால் இருகப்பற்றி "அடே, மடயா, நீ கீச்சு கீச்சு என்றாலும் எனக்குச் சீற்றமோ சிறிதும் பிறக்கக் காணேன். பிழைத்தனை, போ. என் கை வண்ணமும் கண்டாய். இனியேனும் புத்தி வரட்டும், போ!" என்று இகழ்ந்து நகைத்தனன். கந்தனும் கோபம் தோன்ற மறுநகை நகைத்து, "நானும் நின் கழுத்தில் இரத்தம் கசியக் கண்டேன்," என்றியம்பி அவ்விடம் விட்டகன்றனன்.

கந்தன் சென்றதும் கலாநாதன் கருணாகரரை யணுகி "ஐயா, கருணாகரரே, விடையெனக்குத் தந்தருள்வீர். புகுந்தவிடமெல்லாம் போர்விளைக்கும் பொல்லாவிதிப் பாவியேன் புசித்தருந்தி யுரையாட வந்தும் இரத்தமே கசியப் போகின்றேன்" என்றனன்.

"மகனே, பூசலுக்குக் காரணம் நீ யல்லவே. அப் பெருங்குன்றச் சிறுவிலங்கல்லவோ சீறிப்பாய்ந்தது. பொழுது விடிவதற்குள் அக்காடியைத் தன் குகைக்குத் துரத்தி விடுகின்றேன் பார். நீ பட்ட இரணத்தைக் காட்டு பார்ப்போம். பெருங்குன்றக் கயவர்தம் கைக் கத்தியை நம்பலாகாது" என்று இவ்விதம் கருணாகரர் சொல்லி வந்ததைக் காதில் கேட்டதும் கேளாதது மாய்க் கலாநாதன் கழுத்திடை வழியும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டே கலக்கமுடன் நின்ற காந்திக்கருகு சென்று, "வந்தவுடனுனக்குச் சஞ்சலத்தைத் தந்துவைத்த என்னையும் பொறுப்பையோ, காந்தி, இச் சிறுபூனை சீறியதற்குச் சீற்றம் கொண்ட பிழை எனதேயாகும். நீ எதிரிலில்லாவிடில் அப்புழுவை யான் எளிதில் விட்டிரேன்......" என, எப்பிழையைப் பொறுக்க வேண்டினனோ அதையே பெருக்கி முடித்தான். தலைகவிழ்ந்திருந்த காந்தி எதிர் நிமிர்ந்து, "ஐய, யானிருந்தது இடையூறாயின் என்னைக் களபலி கொடுத்துவிட்டுப் போர்துவக்கி இருக்கலாமே, வெற்றியும்வாய்த்திருக்கும்," என்று படபடத்து மொழிந்தாள்.

இதுகேட்ட கருணாகரர், "நன்று நன்று மகளே, நீ நின்ற நிலை வெகுநன்று. நாள் பல கழிந்துவந்த என் நண்பனுக்கு இதுதானோ நீ கொடுக்கும் முகம். கடிக்க வந்த பாம்பைத் தட்டி யெறிந்ததை யோர் குற்றமென்றல்லவோ நீ பாவித்து ஏசுகின்றாய்," எனக் கடிந்தனர்.

"தந்தையே, என்முன் நிகழ்ந்தபோரில் யார் செய்தது தருமமென்றும் யார் செய்தது அல்லதென்றும் ஓர்ந்துரைக்க நான் அருகளல்லள். எதிர்த்தது யார் தடுத்தது யார் என்பதையும் நான் கருதவில்லை. எனக்குத் தெரிந்தது ஒன்றுதான் உளது. நம் கலாநாதர் கலகக் குழப்ப இரணகள மத்தியில் கூத்தாடும் கொள்கையவர் என்பது திண்ணம். கண்டவொரு வீரனுடன் கைகலக்காது அவருக்குத்தீராது. நண்பரெனின் அவர்களுடன் அன்பு கொண்டு கவுரவத்திற்காகச் சண்டை. பகைவராயின், சினங்கொண்டு செருக்கழிக்கச் சண்டை. சத்துருவுமல்லாதது மித்துருவுமல்லா திருப்பவர்களுடன் முன்பட்டான் என்று சண்டை, பின்பட்டான் என்று சண்டை. இப் பெருமகற்கு ஆறுவது அறிவும் போரேயாயிற்று என்னின்......"

"பெண்ணே, காந்தி, என்ன, நாதந்தன கூற இன்று நீ துணிந்தது. வாட்போரும் விற்றொழிலும் ஆடவர்க்குரிய ஆற்றல் முறை. அன்னது பற்றி மனத்திலெண்ணுவதும் நாவால் புகல்வதும் மகளிர்க்கு அழகன்று."

"அழகல்லன செய்வது கிடக்கச் சொல்வதோ தீது. இப்பதிதனில் நம் கலாநாதர் உத்தமர் என்பதை நான் மறந்தவளல்லள். வழியில் கிடக்கும் புழு வொன்றை மிதிக்க மனம்பெறாது நூறடி விலகியே நடப்பவர். இரப்போர் எவரும் இச் செல்வக் கம்மியர் வாயிலை உண்பதுவும் உடுப்பதுவும் பெறாதலின்றிக் கடந்திலர். எனினும், போரொன்று தேடி உயிரொன்றும் வாங்கும் வாழ்க்கையர். இவ்வாறு கொள்வது ஒருபோதும் கொடுப்பது ஒரு போதுமாய்ப் பயின்றுள அவர் கையை யான் பரிவுடன் பாராட்ட எங்ஙனம் இயைவேன்!"

"நில், நில், காந்தி கற்பகத் தருவெனத் தழைத்த இவனது கரங்கள் நெறிபிறழ்ந்து கொலை யொன்றும் இழைத்ததில்லை. வாளை, உலையில் காய்ச்சுவதிலும் போர் முனையிலதை ஓச்சுவதிலும். இவனிலும் தக்கோன் இப்புவியில் காண்பதரிது. அக் கையைத்தான் நீ ஏற்கும் பாக்கியம் செய்துளாயோ என மகிழ்கின்றேன்", என்று சொல்லிக் கருணாகரர் கண்ணீர் வடித்து



நிற்குங் கலாநாதனைக் காட்டிப் "பெண்ணே, காந்தி, நீ செய்துவந்த பிரசங்கம் இத்துடன் போதும். என் மருகன், நின்மணாளனிற்கு இனியன கூறி யவனை யாற்றுவாய்" என்று பகர்ந்து சிறிதளவு விலகி நின்றார்.

காந்திமதியின் கண்ணினின்றும் இரண்டொரு நீர்த்துளிகள் சிறைநீங்கிக் கன்னத்தில் புரளாதிருக்கவில்லை. நிலம்நோக்கி நின்ற கலாநாதனை நெருங்கி, "அய்ய, அழுவதேன். பிடித்தாட்டும் இம் மதமாற்சரியமாகிற பேய்களை நமது தொழிலிற்கே உரிய உலையிலிட்டுப் பொசுக்குவீர். கொலைக்குக் காரணமாய கருவிகளுடன் பழகாது ஏழேழு கடல்களுக்கப்பால் வீசியெறியுங்கள்." என அன்புடன் மொழிந்தாள்.

"காந்தி, என்ன செய்வேன். துறவுபூண்டு இவ்வுலகினின்றே விலகினாலன்றிக் கைத்தொழிலை யான் எவ்வாறு ஒழிப்பது. கத்தியும் கவசமும் மற்றவர்களுக்கு ஆக்குங்கால் யானே அவைகளைக் கையாளாதிருக்க இயலவில்லையே !"

"தேன்வழித்தவன் நியாயமோவிது ? ஆயின் தொழிலையேதான் தொலைத்து விடல்வேண்டும். மானிடற்கு விதித்துள அற்ப ஆயுளுக்கும் இடையூறுகும் ஆயுதங்களைப் பெருக்கிப் பிழைத்தலை யொழித்து வாழ்தலொவ்வாதோ."

"குண்டலினிமுதல் வையை வரையில் நிகரற்றவனாய் விளங்கும் நான் இத்தொழிலை இழந்தபின் வாழ்விற்கு என்ன செய்வேன் ?"

"நாழியரிசிக்கா சிந்திக்கின்றீர். கத்தியும் ஈட்டியும் தவிரக் கம்மியர் செய்வது வேறொன்று மில்லையோ! இல்வாழ்வோர்க்கு இன்றியமையா மண்வெட்டியும் கலப்பையும் கொழுவும் பூட்டும் தாழ்ப்பாளும் உமது நினைவிற்கு எட்டாதது என்ன மாயமோ ! இதிற் பழியுமில்லை......"

காந்திமதியின் மொழிகளைக்கேட்க இனிக் கருணாகரர்க்குச் சகிக்கவில்லை. போரென்னப் பதறும் கையன் கலாநாதன் என்பது அவர் அறிந்ததே. ஆதலால் சாந்தமும் அமைதியும் தன்மகள் அவனுக்குப் போதித்து வரும் வரையில் சம்மதித்து இருந்தார். ஆயினும் போர்க் கருவிகளைவிட்டுப் பூட்டும் சாவியும் செய்யச்சொல்வது அவருக்கு இழிவாகத் தோன்றியது. ஆகையாலவர் அவளது உரையைத் தடுத்துச் "சீ ! போ! பெண்ணே ! பூட்டாம் தாழ்ப்பாளாம்! பாரையாம் கொழுவாம்! சீ! சீ! அரிமணையும் ஊதுகுழலும் ஏனோ விட்டுவிட்டாய். இவைகளையெல்லாம் ஒரு கழுதையின்மேல் ஏற்றிக் கொண்டு நீயேபோய் ஊரூராய் விற்றுவா! என்ன! காந்தி, புத்திதான் என்ன உன்னை யடியுடன் விட்டோடிவிட்டதா ! என்னெதிர் இனி நிற்காதே!" என்று கூறி யவளை அழைத்துச்சென்று உள்ளிடம் விட்டுத் திரும்பி வந்தார்.

# தமிழ்ப் பாடம் 2.

## நள வெண்பா

### சுயம்வர காண்டம்.

(15-வது பக்கத் தொடர்ச்சி)

4 வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன—கஞ்சங்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு.

**பதப்பிரிவு** :—வெம் சிலையே கோடுவன மென் குழலே சோருவன அம் சிலம்பே வாய் விட்டு அரற்றுவன கம்சம் கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே விலங்குவன மெய் நெறியை விட்டு.

**அன்வயம்** :—வெம்சிலையே கோடுவன. மென்குழலே சோருவன. அம்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன. கஞ்சம் கலங்குவன. மாளிகைமேல் காரிகையார்கண்ணே. மெய் நெறியைவிட்டு விலங்குவன.

**பதவுரை.**

வெம் - கொடிய
சிலையே - விற்களே
கோடுவன - கோணலாய் இருப்பவை,
மென் - மிருதுவாகிய
குழலே - கூந்தலே
சோருவன - சோர்வடைந்து இருப்பன,
அம் - அழகிய
சிலம்பே - சிலம்புகளே
வாய்விட்டு - வாய்விட்டு
அரற்றுவன - கதறுகின்றவை,
கஞ்சம் - தாமரைகளே
கலங்குவன - கலங்குகின்றவை,
மெய் - உண்மையாகிய
நெறியைவிட்டு - வழியைவிட்டு
விலங்குவன - விலகிப் போகின்ற சொற்கள்
மாளிகைமேல் - மாடங்களின் மீதுள்ள
காரிகையார் கண்ணே - மாதர்களிடத் திலேயே.

(நேர்வதைக் காணலாம்.)

**கருத்து** :—அந்த நகரத்தில், நேர்மையற்றனவும், சோர்வடைந்து தளர்வுற்றனவும், துக்கத்தாலும் பயத்தாலும் கூக்குரலிடுகின்றவர்களும், கலக்கம் எய்தினவர்களும், பொய் சொல்லுகின்றவர்களும் இல்லை.

**விளக்கம்** :—அந்த நகரத்தில் நேர்மையா யில்லாதன இருந்தனவோ? இல்லை. இல்லையெனில் கோணலாயிருப்பவைகளே அங்கு இருந்ததில்லையா? அவ்வாறன்று, எது வொன்று கோணலாயிருக்க வேண்டுமோ அது வொன்றே கோணலா யிருந்தது. அவ்வாறு கோணலாயிருந்தது எது ? வெம்சிலையே - கொடிய வில் மாத்திரமே. இனி, உடலும் ஆவியும், பிணி வறுமை முதலிய துன்பங்களால் தளர்ந்து சோர்வுற்றன அந்நகரத்தில் இருந்தனவோ! இல்லை, எல்லாம் இறுமாந்தே இருந்தன. ஆனால் சோர்ந்து இருந்தன இல்லவே இல்லையோ ? அவ்வாறன்று, எது வொன்று நெறித்திராமல் இயற்கையிலேயே சோர்ந்திருக்க வேண்டுமோ அது வொன்றே சோர்ந்திருந்தது. அன்னதற்கு உதாரணம் உளதோ ? மென்குழல் - மாதர்களது துவளும் தன்மை வாய்ந்த மெல்லிய கூந்தலே. துஷ்டர்களால் தீதுற்றும் வறுமை விபத்து அகாலமரணம் போன்ற இடுக்கண்களாலும் 'கொடுமையோ கொடுமை' என்று மாந்தர் கூக்குரலிடக் கேட்பதற்கு நேருமோ அந்நகரில்? நேரவே நேராது. ஆனால் வாய்விட்டு அரற்றுவன ஒன்றேனும் இருந்ததில்லையோ ? வாய்விட்டுக் கதறுவன

போல் காதிற்குக் கேட்ப தொன்றிருந்ததே யன்றி உண்மையில் துன்பத்தால் அழுவன இல்லை. ஆயின் அவ்வாறு காதில் கேட்பது எது? அம்சிலம்பே - மாதர்கள் நடக்கும்போது கலீர் கலீர் என ஒலிக்கும் பாதச் சிலம்புகளே. கலங்குவன உண்டோ? கஞ்சம்=(நீரலையும்போது குளத்தில் கலங்குவதுபோல் தோன்றும்) தாமரையொன்றே. மெய்நெறியை விட்டுவிலகும், அதாவது பொய்யான, சொற்கள் அந்நகரத்தில் எப்பொழுதேனும் யாரேனும் சொல்லுவரோ? சொல்லவே சொல்லார். ஆயின் பொய் என்பதே அங்கு இல்லையோ? அவ்வாறு அன்று, எந்த வொருநிலையில் பொய் போன்ற சொற்களும் வாஸ்தவத்தில் பொய்யென்னும் பாவத்தில் சேராவோ அந்த வொரு நிலையிலேயே பொய்போன்ற சில சொற்கள் மாந்தர் வாய்நின்று வரும். அப்படிப்பட்ட சந்தர்ப்பம் யாரிடத்தில் பழகும்போது நேரும்? மாளிகைமேல் காரிகையார் கண்ணே=மாளிகைகளின்மேல் தம் நாயகிகளிடத்தில் பொய்போன்ற சில சொற்கள் பாராட்ட ஆடவர்களுக்கு நேரும். (இங்குக் கண் என்பது பார்க்கும் உறுப்பாகிய 'கண்' அன்று. இடத்தைக் காட்டும் உருபு. காரிகையார் கண்ணே=மாதர்களிடத்திலே. வீட்டின்கண் இருப்பான், என்பதுபோல.)

விரிவுரை :—இந்தச் செய்யுளும் அடுத்த செய்யுளும் மாவிந்த நகரத்தின் தருமமும் இன்பமும் வாய்ந்த வாழ்க்கையைக் காட்டுகின்றன. இந்தச்செய்யுளில் வளைதலில்லா நேர்மையும் தளர்ச்சியில்லாக் கிளர்ச்சியும் வருத்தமில்லாக் களிப்பும் கலக்கமில்லா அமைதியும் பொய் கலவா மெய்யும், அடுத்த செய்யுளில் கல்வியும் அறிவும் செல்வமும் ஈகையும், அந்நகரத்தில் தங்கியிருந்த தன்மையைக் காணலாம். இவைகளைச் சாதாரணமாய்க் கூறிவிடாமல் புகழேந்திப்புலவர் சாமர்த்தியமாகக் கூறுகின்றார். எல்லோரும் சொல்வதுபோல் சொல்லாமல் ஒரு விஷயத்தைக் கவிகள் திறமாகக் கூறுவதை அணி என்பர். அணி என்றால் அழகு அல்லது ஆபரணம் என்று அர்த்தம் வடமொழியில் அலங்காரம் என்பதும் ஆங்கிலத்தில் Figures of Speech என்பதும்; தமிழில் அணியெனப்படும் இதுவேதான். இயற்கையிலே அழகுவாய்ந்த ஒரு பெண்ணிற்கு ஆபரணங்கள் பூட்டினால் எப்படி அவளழகு பின்னும் அதிகமாகின்றதோ அப்படியே உயர்ந்த ஒரு கருத்தை அல்லது பொருளைச் சொல்லும் திறத்தால் அலங்கரித்துப் பெருமைப்படுத்துவதால் இதற்கு அணி என்று பேராயிற்று. கருத்தும் பொருளும் உயரியதாய் இருந்தால்தான் அணியும் சிறக்கும். தமிழில் நூற்றிற்குமேற்பட்ட அணிவகைகள் இருக்கின்றன. உவமை அணி என்பது ஒன்று. அது ஒன்றற்கொன்று குணத்தினாலோ தொழிலாலோ பயனினாலோ ஒத்திருப்பதைக் காட்டும். குளிர்ந்த தண்மை ஒளி முதலிய குணங்களால் சந்திரனை மாதர் முகத்திற்கு உவமை கூறுவர். 'பிரகாசமான முகத்தையுடையவள் இவள்' என்று சொன்னால் அணியொன்றும் அமைக்காமல் கூறுவதாகும். ஆனால் 'மதிபோன்ற முகத்தாள் இவள், அல்லது மதிமுகத்தாள்' என்று சொல்வதானால் உவமையணி அமைந்திருக்கும். அப்படியே தனக்கென நினைக்காமல் கணக்கின்றிக் கைம்மாறு வேண்டாது அளிக்கின்ற வள்ளல் ஒருவனை முகிலனைய வண்மையான் (முகில்-மேகம்)என்பதும் உவமை அணி. உவமை அணி பலவிதம். அவைகளை வருமிடத்தில் காட்டுவோம். அணிகளின் தன்மை இன்னதென்று அறிதற்கு மாத்திரமே இவ்விடத்தில் இது கூறப்பட்டது.

இந்தச் செய்யுளும் அடுத்த செய்யுளும் ஒழித்துக் காட்டு அணி என்னும் அணியால் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அணியின் இலக்கணம் என்னவென்றால், "இருப்பது இதுதான்" என்று காட்டி மற்றதெல்லாம் இல்லையென்று ஒழித்துவிடுவது. வளைவதுவில்லே என்றதால் அரசனது செங்கோல், மாந்தரது வாய்மை ஒழுக்கம் உருவம் முதலியன யாவும் கோணுவதில்லை என்று விளங்கவில்லையா? அவ்வாறே மற்றவைகளையும் ஆராய்ந்து பாருங்கள். இந்த அணியின் இலக்கணமும் சுலபம். அது செய்யுளில் வந்தவிடத்தில் தெரிந்து கொள்வதும் சுலபம். கவிகள் இந்த ஒழித்துக் காட்டணியின் நயத்தால் இருக்கக் கூடாததை இல்லை யென்று ஒழிப்பதினாலேயே இருக்கவேண்டிய தன்மையோ பொருளோ இருக்கின்றதென்றும், அந்த அமைப்பினாலேயே நிலைநிறுத்துவர். அதர்மம் துயரம் வறுமை அறியாமை முதலியன இன்மையையும், நீதி இன்பம் செல்வம் கல்வி வண்மை முதலியன நிலைப்பதையும் இச்செய்யுள்களில் காணலாம். இனி, இவ்விதம் இல்லையெனக் கவிகள் ஒழிப்பனவற்றைச் சில, பொருளாலும் சில நிலைமையாலும் சில தொழிலாலும் சில பயனாலும் ஒழித்துக் காட்டுவர்.

தெரிவனநூல், தெரியாதன மாதர் இடை, இல்லாதன இரத்தல், கல்லாதன கரவு, என்று சொல்லும்போது பொருள்கள் குறிக்கப்பட்டன. சிலையே கோடுவன, குழலே சோருவன, கஞ்சம் கலங்குவன, என்று காட்டும்போது கோணல் சோர்வு கலக்கம் என்னும் நிலைமைகள் குறிக்கப்பட்டன. சிலம்பே அரற்றுவன, என்றபொழுது கதறுவதாகிய தொழில் அல்லது செய்கை விலக்கப்பட்டது. ஒருவரோடு ஒருவர் உரையாடும்போது பொய் எனும் பயன் பிறக்க வேண்டுமாயின் அது மாதரிடத்தில் ஆடவர் பேசுகின்ற ஒரு நிலையிலேயே நிகழக் கூடியதாகும் என்று கூறும்போது பொய் எனும் பயன் ஒழிந்தது. சொல் மாத்திரத்தில் ஒழித்துக் காட்டுவதற்கு இவ்விரு செய்யுள்களிலும் உதாரணம் இல்லை. அதற்கு இரண்டொரு உதாரணம் கூறுவேன் :—ஓர் அரசனைப் பார்த்துக் கவியொருவன், "அரசே, உனது நாட்டில் தீத்தொழில் செய்வோர்கள் அந்தணரே" என்று புகழ்ந்தான். தீத் தொழில் செய்வோர்கள் என்ற வாசகத்தைச் சொல்லளவில் நோக்கும்போது, தீ - தீமையான, தொழில் - காரியங்களை, செய்வோர்கள் - செய்கின்றவர்கள் என்ற பொருள் தோன்றுகிறது. ஆனால், பின் அந்தணர் என்று வருவதால் தீத்தொழில் என்பதற்குத் தீ - நெருப்பில், தொழில் - செய்யும் யாகம ஹோமம் முதலிய கருமங்கள், என்று பொருள் ஏற்பட்டுத் தீத்தொழில் என்பது அவ்வரசனது நாட்டில் சொல்மாத்திரத்தில் இருந்தால் இருக்கலாமேயல்லாது மற்றபடி காண்பதற்கில்லை. தீ என்றால் அக்னி என்பது ஒரு அருத்தம், இன்னொன்று தீமை என்றபதம் தீ என்று நின்றது. (இப்படி இருபொருள் தரப் பதங்களை உபயோகிப்பதைச் சிலேடை என்று கூறுவர். அதன் இலக்கணத்தை வேறிடத்தில் விளக்குவேன்). "அரசே, உனது நாட்டில் சிறையென்பது பறவைகளுக்கே அல்லாமல் மனிதர்களுக்கு இல்லை" என்று புகழ்வதும் சொல்லால் ஒழித்துக்காட்டுகின்ற அணியாம். சிறை என்பதற்கு இறகு, காவற்கூடம் என்று இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. சிறை என்னும் சொல்லைப் பறவைகளிடத்தில் இறகு என்னும் பொருளில் காண்பதொன்றே அந்நாட்டில் கூடும். மனிதர்க்குச் சிறை (காவல்கூடம்) இல்லை.

அதிவீரராம பாண்டியன் இயற்றிய 'நைடதம்' என்னும் நளனது கதையில் நிடதநாட்டை இவ் வொழித்துக் காட்டணியால் வருணித்திருப்பதையும் பார்க்கலாம். அச்செய்யுள் பின்வருமாறு :—

கொடியன மகளிர் தங்கள்
குழையுநுண் மருங்கே வாளா
படுகொலை புரிவ மாதர்
படைநெடுங் குவளைக் கண்ணே
யடிமிசை முறையிட் டென்று
மரற்றுவ சிலம்பே சூழ்ந்து
கடிமது நுகர்வ வன்னோர்
கருங்குழற் காமர் வண்டே.

[ஆடவர்க்கு ஆசையூட்டி வருத்துகின்ற மாதரதுவளும் இடையே கொடியவைகள். பார்வையால் மயல் விளைத்து உயிர் கவர்ந்து கொலை என்னும் தொழிலைச் செய்வன அம்மாதர் கண்களே. கால்விழுந்து கதறுவன அவரணிந்த சிலம்புகளே அவர் கூந்தலிலணிந்த பூக்களின் தேனைப்பருகும் வண்டுகளல்லாது மதுக்குடிப்போரில்லை] கொடியன, என்பதற்குக் கொடுமையானவை அல்லது கொடிபோன்றது என இரு பொருள்கள் இருப்பதால், சொல்லளவிலும் கொடுமை ஒழித்துக் காட்டபடுகிறது. இந்த ஒழித்துக்காட்டணிக்கு வடமொழியில் பரிசங்கியாலங்காரம், என்பது பெயர்.

இதுவரையில் இந்தச் செய்யுளில் கையாண்ட அணியின் இலக்கணத்தைக் கூறிவந்தோம் பொருளிலக்கணத்தின் ஒரு பகுதியும் இங்கு அறியவேண்டியிருக்கிறது. அப்பொருள் இலக்கணம் அகப்பொருள் இலக்கணம் புறப்பொருள் இலக்கணம் என இருவகைபடும். பொருளிலக்கணம் என்னும் இந்த இலக்கணம் தமிழிற்கே உரியது அகப்பொருள் என்பது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் காதல் உதிப்பதுமுதல் பின் அவர் வாழ்க்கையுள்பட்டு வாழும் வாழ்வையெல்லாம் கூறிப் பற்பலசந்தர்ப்பங்களில் அவர்களது செய்கையும் மனநிலையும் இருக்கும் விதத்தை விவரித்து விதி கூறுவதாகும். அகப்பொருளிற்கு இலக்கணம் தொல் காப்பியம் கூறுவதுடன் மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக்கடவுளேகூடப் பணித்தருளி "இறையனாகப் பொருள்" என்னும் பேரோடு வழங்கப்பெற்று வருகின்றது. தர்மம் அர்த்தம் காமம் அல்லது அறம்பொருள் இன்பம் என்று வழங்கப்படுகின்ற மானுடப் பயன்களுள் மூன்றாவதாகிய காமம் அல்லது இன்பம் என்பதின் உண்மைத் தன்மையை விளக்கிக் காட்டும் இலக்கணம் அகப்பொருள் இலக்கணம். திருக்குறளின் காமத்துப்பால் கூறுவதும் இதையே [இச்செய்தியாவும் ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் இப்பத்திரிகையில் எழுதும் அகப்பொருள் வரலாற்றில் காண்க] இதுவல்லாத மற்ற பொருள்களின் இலக்கணம் புறப்பொருள் இலக்கணமாம். வேந்தரையும் அவரிடும் போரையும் இன்னும் அரசற்கியைந்த கொடை முதலிய குணங்களையும் பெரும்பான்மை இப்புறப் பொருள் இலக்கணம் வகுத்துக்காட்டும்.

முன் செய்யுளில் ஊடலைப்பற்றிச் சொல்லிய செய்தி அகப்பொருளைச் சார்ந்ததே. இங்குப்'பொய் பாராட்டல்' என்னும் ஒரு அகப்பொருளில் அடங்கிய நிகழ்ச்சி அறியாமற்போனால், "மாளிகை மேற் காரிகையார் கண்ணே விலங்குவன மெய்ந் நெறியைவிட்டு" என்னும் அடிகளின் சரியான அர்த்தமாவது அதில் அடங்கியுள்ள நயமாவது விளங்காது பொய் பாராட்டல் என்பது நாயகனும் நாயகியும் இன்புற்று ஒருவரோடொருவர் அளவளாவிப்பேசும்பொழுது நாயகன் தன் தலைவியின் அழகையும் தன்மையையும் வியந்து உரைப்பது ஆகும். உவகையாலும் வியப்பினாலும் பிறக்கும் அவ்வுரைகளில் உலகமலைவான சில பொய்கள் கலந்திருக்குமாயினும், அதை யாவரும் மெய்யென்று கொள்ளார். ஆதலால் அது பயனளவில் பொய்யாகாது. பொய்யை இருவகையாய்ப் பிரிக்கலாம். சொல்வதை மெய்யென்று ஒருவனை நம்பச் செய்யும் எண்ணத்தோடு சொல்லப்படுகின்ற பொய்களை மெய்ப்பொய்கள் என்று அழைக்கலாம். மருந்துவர்த்தகம் செய்வோர் 'இது எல்லாநோயையும் தின்றமாத்திரத்தில் தீர்க்கும்' என்று விற்கும்போது அது மெய்பானபொய். அப்படிக்கின்றிச் சொல்வது பொய்யென்று சொல்லுவோர்க்கும் கேட்போர்க்கும் ஐயம்சிறிதேனுமில்லாமல் தெரிந்திருந்தும் சொல்லப்படுவன பொய்யானபொய். இவ்விதமாய்ப் பொய்ப்பொய்யைக்கொண்டு தலைவன் தன்காதலியின் அழகைப்புகழ்வது பொய்பாராட்டலாம். "காதலி. நின்முகத்திற்கும் சந்திரனுக்கும் வித்தியாசம் அறியமுடியாமல் வானத்திலுள்ள நக்ஷத்திரங்கள் தம் நிலைகுலைந்து கலங்குமே," என்ற கருத்துடைய குறள் ஒன்று இருக்கின்றது. 'காந்தியால அக்காதலியின்முகம் சந்திரனைமுற்றிலும் ஒத்திருப்பதால் மதியுடன் இடைவிடாமல பழகியுள்ள விண்மீன்களும் இவள் முகம் எது சந்திரன் எது வென வேற்றுமையுணராமல் கலங்கும்' என்பதில் நக்ஷத்திரம் கலங்கும் என்னும் செய்தி பொய்யென்பதுயார் அறியார். இவ்விதமே, மழைக்காலத்தில் மேகம் கருகிக்கருகி மின்னுகின்றதற்குக் காரணம் ஒன்று கற்பிப்பான்போல் நாயகன் ஒருவன் தனது தலைவியைநோக்கிக் 'காரிகையே, இந்த மேகம் உன் கூந்தலைப்போல் கறுப்பாக முயன்று முயன்று பார்த்தும் முடியாது வெட்கமுற்றுப் பல்லை இளிப்பதையன்றோ இவ்வுலகத்தார் அறியாமல் மின்னல் என்று சொல்லுகின்றனர்," என அவள் கூந்தலின் கறுமையைக்கொண்டாடினான். மின்னலை மேகத்தின் பல்லிளிப்பு என்றும் அம்மேகம் இளிப்பதற்கும் காரணம் கருமையில் அவள் கூந்தலுக்குத் தோற்றதே என்றும் சொல்வார் சொன்னாலும் அதை மெய்யோவென்று கணமேனும் நினைக்கத்தான் யார் போகின்றார்! ஆதலால் இந்தச் சொற்களால் பொய்யால் விளையும் பயன் உண்டாகவேண்டுமென்று யாரும் நினைத்ததில்லை. பொய்யே இங்குப் பொய்யாய்விட்டது. இவைபோன்ற போலிப் பொய்கள் பாராட்டிக் காதலர் தம்நாயகிகளிடத்தில், (அகப்பொருளிலக்கணத்தில் கூறியுள்ளபடி) சொன்னாலுண்டே யல்லாது, மாவிந்த நகரத்திலே உலகவழக்கத்தில் நாமறிந்த பயன்கருதிய பொய்மொழி யாரும் பேசமாட்டார்கள் என்பது இச்செய்யுளின் பின்னிரண்டு அடிகளது பொருள். இப்பொருள் தருவதற்கு, "மெய்யாகிய நெறியை விட்டு மாந்தரது சொற்கள் விலங்குவன மாளிகைமேற் காரிகையார்கண்ணே காணலாம்" எனச் சந்தர்ப்பத்திற் கிணங்க வருவித்துக்கொள்ளல் வேண்டும். அல்லாது, கண் என்பதை உறுப்பாகிய கண்கள் என்று நினைத்து, மாதர்களுடைய கண்கள் மெய்யான நெறி அதாவது தருமத்தினின்று விலகுமெனப் பொருள்கொண்டு மாவிந்தத்தின் மாதருக்கு அபவாதம் தேடிவைப்பது அழகல்ல. பின், அதற்கு ஒரு சமாதானம் வலிந்து முயன்றாலும் பொருந்தாது.

5 தெரிவனநூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—யொருபொழுது
மில்லா தனவு மிரவே யிகழ்ந்தெவருங்
கல்லா தனவுங் கரவு.

பதப்பிரிவு :—தெரிவன நூல் என்றும் தெரியாதனவும் வரி வளையார் தங்கள் மருங்கே ஒரு பொழுதும் இல்லாதனவும் இரவே இகழ்ந்து எவரும் கல்லாதனவும் கரவு.

188985

**கருத்து** :—அந்நகரத்தில் எல்லாரும் கற்றவர். மாதரெல்லாம் நுண்ணிய இடுப்பையுடைய அழகியர். பிச்சையெடுக்கும் வறியோர்களில்லை. தம்மிடத்திலிருப்பதைப் பிறர்க்குதவி யாக்காமல் ஒளித்துவைக்கும் உலோபிகளும் இருந்திலர்.

**பதவுரை.**

தெரிவன - யாவருக்கும் தெரிந் திருப்பவை
நூல் - கல்வி,
என்றும் - எப்பொழுதும்
தெரியாதனவும் - ஒரு வரும் பார்த்திராதிருப்பவை
வரி - கோடுகளையுடைய
வளையார்தங்கள் - வளையல்களையணிந்த மாதர்களுடைய
மருங்கே - இடுப்புக்களே.
ஒருபொழுதும் - எந்தக்காலத்திலும்
இல்லாதனவும் - இல்லாமல் இருப்பவை
இரவே - பிச்சையெடுத்தலே.
இகழ்ந்து - இது வேண்டாமென்று இகழ்ந்து
எவரும் - யாவரும்
கல்லாதனவும் - கற்காமலிருப்பவையும்
கரவு - உள்ளதை ஒளிப்பது.

**விளக்கம்** :—மாவிந்த நகரத்திலுள்ளவர்க்கு வஞ்சனை பொறாமை பொய் முதலியன தெரியுமோ? தெரியாது. ஆயின் அவர்களுக்கு எதுதான் தெரியும்? எதுவொன்று தெரியவேண்டுமோ அதுதான் தெரியும். எதைப்போல்? நூல்-சாஸ்திரங்களைப்போல். தெரிவது நூலாயின் தெரியாது இருந்தது எதுவும் இல்லையா? அவ்வாறன்று, தெரியாத காரணத்தால் எதுவொன்று சிறப்பை அதிகப்படுத்துமோ அதுவொன்றே தெரியாமலிருந்தது. எதைப்போல்? மருங்கு - இடுப்பைப்போல். யாருடைய மருங்கு? வளையார் தங்கள் மருங்கு - வளையல்களை யணிந்த மாதர்களுடைய இடுப்பு. அவ்வளைகள் எப்படிப்பட்டவை? வரிவளை - கோடுகள் அமைந்த வளைகள். வரிவளையார் தங்கள் மருங்கு எப்பொழுது தெரியாது? என்றும் - ஒருபோதும் தெரியாது. எல்லாம் நிறைந்த அந்நகரத்தில் இல்லாதது உண்டோ? இருக்கப்படாதது மாத்திரம் இல்லை. எதைப்போல்? இரவு - பிச்சையைப் போல். எல்லாரும் எல்லாம் கற்றவரோ? ஆம். ஆனால் இதைக் கற்பது கூடாது என்று எவரேனும் எதையேனும் கற்காது விட்டதில்லையா? அப்படியன்று, கல்லாது ஒழிக்க வேண்டியவற்றை அவர் கற்றதில்லை. எதைப்போல்? கரவு - ஒளித்தலைப்போல் (எதை ஒளித்தல்? தம்மிடத்திலிருப்பதை மற்றவர்களுக்குக் கொண்டுபோய் உதவி செய்யாமல் ஒளித்து வைத்துக் கொள்வது.)

**விரிவுரை.**—இந்தச் செய்யுளிலும் முன் செய்யுளிற்போல் ஒழித்துக் காட்டணியின் உதவியால் மாவிந்த நகரத்தின் சிறப்பைக் கவி பாராட்டுகின்றார். மாதருக்கு இடை நுண்ணியதாய் இருப்பதே அழகு. இந்தத் தன்மையைக் கவிகள் சமையம் கிடைத்தபோதெல்லாம் வெகு அழகாய்ச் சொல்வர். கண்ணுக்கும் தெரியாத நுண்ணிடையாம் மாவிந்த நகரத்து மாதர்களுக்கு, இடையானது பிடிபோல் (பிடி - குவிந்த கைப்பிடி) சிறுத்திருக்கலாம்; அல்லது துடிபோல் (துடி-உடுக்கை) குறுகி இருக்கலாம். ஆனால் புகழேந்தி சொல்லும்விதம் கண்ணுக்கே தெரியாது இருந்தால் மாதர் கதி என்னவாவது. அதாவது இடுப்பு வெகு சிறியது என்பது கருத்து. புகழேந்தியாவது இடுப்பு இருக்கலாம், கண்ணிற்குத் தெரியவில்லை யென்றார். கம்பரோ சீதையை, 'மருங்கே இல்லாத நங்கை' ஆக்கிவிட்டார். கேட்போர் மகிழும்படி சிறியதை மிகச் சிறியதாகவும் பெரியதை மிகப் பெரியதாகவும் சாமர்த்தியமாய்க் கூறுவதும் அணிகளுள் ஒன்று. இதற்கு உயர்வு நவிற்சி அணி (உயர்வு - மிகுதியாக, நவிற்சி - சொல்லப்படுகின்ற, அணி-அழகு) என்று பெயர். வடமொழியார் இதை அதிசியோக்தி அலங்காரம் என்பர். பொதுவாக இந்த உயர்வுநவிற்சி யணியின் தன்மையைக் காட்டினேனே யல்லது, அது அமைகின்ற விதங்களை எல்லாம் இங்குச் சொல்லவில்லை. முன் சொன்ன ஒழித்துக் காட்டணியைப்போல் இதை வந்த விடத்தில் கண்டு கொள்வதற்குச் சிறிது பழக்கம் வேண்டும். சந்தேகம் இருப்பதற்கே இடமில்லாத விஷயத்தில் சந்தேகம் இருப்பதுபோல் பாவித்துப் பெருமை படுத்துவதும் கூட உயர்வு நவிர்ச்சியணியாகும். அப்படியே இல்லாததை இருக்கிறதென்பதும், இருப்பதை இல்லை யென்பதும், சம்பந்தம் இல்லாத இரண்டிற்குச் சம்பந்தம் கற்பிப்பதும், சம்பந்தம் இருப்பவைகளைப் பிரித்து விடுவதும், காரண காரியங்களை ஒன்றாய் நிகழ்த்திவிடுவதும் ஆகிய இவைபோன்ற அதிசயங்களை யுக்தியால் அழகுபெறக் கூறுவதெல்லாம் உயர்வுநவிற்சி யணி. இடுப்பைப் பற்றியே கம்பர் இந்த அணியால் கூறிய திறத்திற்கு உதாரணம் காணலாம். மணப்பெண்ணாயிருந்த சீதைக்குத் தோழியர் ஆடை ஆபரணாதிகளால் அலங்காரம் செய்யும்போது, அவள் இடுப்பினிற்கு மேகலை என்னும் ஆபரணத்தை அணிந்தனராம். அப்பொழுது வேறு சில தோழியர், 'இவளுக்கு இடுப்பு எங்கே காண்கிலோமே. காணாதது இல்லை என்பது பிரமாணமல்லவா. ஆதலால் இல்லாத இடுப்பிற்கு மேகலை யேது' என்று எடுத்து விட்டனராம். ஆனால் முதல் அணிந்த தோழியர், "காணாதனவற்றை எல்லாம் இல்லையென்பது நியாயமாகுமா! உடலின் இருபாகத்திற்கு ஆதாரமாய் இடுப்பொன்று இருக்கவேண்டுமென்பது அனுமானப் பிரமாணத்தால் ஏற்படுகின்றது. ஆதலால் மேகலையைப் பூட்டத்தான் பூட்டுவோம்' என்று வாதித்து மீண்டும் அவ்வாபரணத்தைப் பூட்டினார்களாம். இன்னவாறு பூட்டுவதும் அவிழ்ப்பதுமாய்ப் பிராட்டியி னிடுப்பிற்குக் கோலம் செய்தவர் துன்பமே விளைத்தனர். இவ்விதமாகக் காட்சிப் பிரமாணத்தால் வாதிக்கும் நாஸ்திகர் இல்லை யென்றும் அனுமானத்தால் ஆஸ்திகர் உண்டென்றும் சொல்லும்படி நின்ற பரம்பொருளேபோல் சீதையினிடையும் ஆயது என்று அதிசியோக்தியாய்ப்

"பல்லிய னெறியிற் பார்க்கும்
பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற
இடையினுக் கிடுக்கண் செய்தார்"

என்று கம்பர், பாலகாண்டத்தில் கோலங்காண் படலம் 12-வது செய்யுளிற் பாடினார்.

ஒருவனிடத்தில் போய் யாசகம் செய்வது மிகவும் இழிவானது. ஏற்பது இகழ்ச்சி. ஆனால் அதனிலும் இழிவானது கொடாதிருப்பது. இயல்வது கரத்தல். இது கருதியே புகழேந்திப் புலவர், 'இகழ்ந்து' என்னும் மொழியைக் கரவோடு சேர்க்கின்றார். ஏற்பவர் இல்லாத நாட்டில் இயல்வதுகரப்பவர் இருப்பதெங்ஙனம். ஆதலால் கரவு இல்லையென்று கூறல் மிகையன்றோ? என்று ஒரு வேளை எண்ணலாம். இரப்பவர் இல்லாதிருந்தால்கொடையாளிகளுக்கே வழியில்லாமற்போய்விடுகின்றது உண்மைதான். அயோத்தியில் 'கொள்வாரிலாமைக் கொடுப்பார்களுமில்லை' என்றார் கம்பர். தரும நூல்களில் கூறியபடி இரப்பது இகழ்ச்சி என்று ஒருவரும் கேட்காதிருந்தால்



கொடை யென்னும் அறத்தைக் கையாள்வதற்கு யாருளர்? இரவச்சம் காட்டிய திருவள்ளுவர் ஈகையைப் பாராட்டி என்ன பயன்! இதற்கு உத்தரம் வெகு எளிது. திருவள்ளுவரே விடையும் காட்டியும் இருக்கின்றார். கேட்டபின் கொடுப்பது கொடையல்ல. அது இல்லை என்று மறுப்பதற்கே சமானம். பிறரெவரும் நம்மை வந்து கேட்கும் வரையில் காத்திருக்காமல், நாமே சென்று அவ்வவர் குறையை அறிந்து தீர்த்தல் வேண்டும். அப்படித் தீர்க்கும்போதும் நம்மால் ஒரு உதவி அவன் அடைகின்றான் என்னும் நினைவு அவனுக்கு வாராதபடி நடந்துகொண்டால் இகழ்ச்சி பிறப்பதற்கு இடமில்லை. நம்மிடத்தில் ஒன்று பெறுகின்றவன் பெறுவதால் நமக்கே ஒரு உதவி செய்வதாக நினைக்கும்படி நாம் நடந்து கொள்ளல்வேண்டும்.

"இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு"

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலமுடையான் கண்ணே யுள."

என்னும் இவ்விரண்டு திருக்குறள்களையும் உரையோடு படித்துணர்ந்து இரவச்சத்திற்கும் ஈகைக்கும் இருப்பதாய்த்தோன்றும் முரண் இல்லாமை தெளிந்து கொள்க

6 மாமனு நூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்-காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

**பதப்பிரிவு** :—மா மனுநூல் வாழ வரும் சந்திரன் சுவர்க்கி தாமரையாள் வைகும் தட தோளான் காமரு பூ தாரான் முரணை நகர்தான் என்று சாற்றலாம் பார் ஆளும் வேந்தன் பதி.

**அன்வயம்**:—பார் ஆளும் வேந்தன்பதி, தாமரையாள் வைகும் தடந்தோளான், காமரு பூந்தாரான், மா மனுநூல் வாழ வரு சந்திரன் சுவர்க்கி, முரணைநகர்தான் என்று சாற்றலாம்.

**கருத்து**:—நளன் ஆண்ட மாவிந்தநகரத்தை எல்லா விதச் சிறப்பிலும் உயர்ந்த சந்திரன்சுவர்க்கி என்பவனுக்கு நகரமாகிய முரணை என்னும் நகரமென்றே கூறலாம்.

**பதவுரை**

பார் - உலகத்தை
ஆளும் - ஆள்கின்ற
வேந்தன் - அரசனாகிய நளனது
பதி - தலைநகராகிய மாவிந்தத்தை,
தாமரையாள் - தாமரையில் வசிப்பவளாகிய வீர இலக்குமி
வைகும் - தங்கிய
தட - பெரிய
தோளான் - தோள்களை யுடையவனும்,
காமரு - அழகிய (காமர் என்னும் பதமே காமரு என்றும் வரும்)
பூ - பூக்களால் கட்டிய
தாரான் - மாலையை அணிந்தவனும்,
மா - சிறந்த
மனுநூல் - மனுதர்மம்
வாழ - (கெடாமல்) வழங்கும்படி
வரு - பிறந்தவனும், ஆகிய
சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்னும் பேருடைய அரசனது
முரணை - முரணை என்னும்
நகர்தான் - நகரே
என்று - என்று
சாற்றலாம் - சொல்லலாம்.
(சாற்றல் - சொல்லுதல் ஆம் - பொருந்தும்)

**விளக்கம்** :—ஆம் - ஆகும் - பொருந்தும் (பயனிலை.) எதுபொருந்தும்? சாற்றல்-சொல்லுதல் (எழுவாய்) எதைச் சாற்றல் ஆகும்? பதி-(மாவிந்த) நகரத்தை. யாருடைய நகரத்தை? வேந்தன் பதி - (நள) வேந்தனுடைய நகரத்தை. என்ன செய்கின்ற வேந்தன் அவன்? ஆளும் வேந்தன் - ஆள்கின்ற வேந்தன். எதை ஆளும் வேந்தன்? பார் - பூமியை. பார் ஆளும் வேந்தன் பதியை என்ன சாற்றல் ஆகும்? என்று - என்று. என்ன என்று? நகர்தான் என்று - நகரே என்று. எந்த நகரே என்று சாற்றலாம்? முரணை என்று - முரணைநகர் என்று, யாருடையது அந்த முரணைநகர்? சந்திரன்சுவர்க்கி முரணை - சந்திரன்சுவர்க்கியினுடைய முரணை. அந்தச் சந்திரன் சுவர்க்கி எதை உடையவன்? தோளான் - தோள்களை உடையவன். எப்படிப்பட்ட தோள் அவை? தடந்தோள் - பெரிய தோள்கள். இன்னும் எப்படிப்பட்ட தோள்? வைகும்தோள் - வசிக்கும் தோள். யார் வசிக்கும் தோள்? தாமரையாள் - இலக்குமி. தாமரையாள் வைகும் தடந்தோளான் ஆகிய சந்திரன் சுவர்க்கி இன்னும் எதை உடையவன்? தாரான் - மாலையை உடையவன் (தார் - மாலை, அதை உடையவன் தாரான்). என்னதார்? பூந்தார்-பூமாலை. அந்தப் பூமாலை எப்படிப்பட்டது? காமரு - அழகியது. அழகிய பூமாலையை அணிந்தவனும், இலக்குமி வசிக்கும் பெரிய தோள்களை உடையவனுமான அந்தச் சந்திரன்சுவர்க்கி எப்படிப்பட்டவன்? வரு சந்திரன்சுவர்க்கி - வரு - வந்த, பிறந்த சந்திரன்சுவர்க்கி. எதற்குப் பிறந்த சந்திரன்சுவர்க்கி - வாழ வரு - வாழ்விக்கப் பிறந்த. எது வாழ? நூல் - சாஸ்திரம். எந்த நூல்? மனு நூல் - மனு தர்ம சாஸ்திரம். அந்த மனுநூல் எப்படிப்பட்டது? மா மனுநூல் - சிறந்த மனுநூல்.

**விரிவுரை**—சந்திரன்சுவர்க்கி யென்பவன் உறையூரைச் சேர்ந்த மள்ளுவநாட்டிற்கு அரசன். முரணை அவனது தலை நகரம். அவன் புகழேந்திப் புலவரைப் பெரிதும் ஆதரித்து இந்த நளவெண்பாவையும் பாடுவித்தான். அதற்குக் கைம்மாறாக நம்புலவர், மாவிந்தத்தின் பெருமை யெல்லாம் சொல்லிப் பின் அதற்குச் சமமாகச் சொல்லக்கூடியது முரணைநகரொன்றே, எனப் புகழ்ந்து தன்நன்றியைஇச்செய்யுளில்செலுத்துகின்றார். இப்படியே கதையோடு சேர்த்துத் தம்மை ஆதரித்தவர்களைப் புகழ்ந்துவிடும் வழக்கம் கவிகளுக்குண்டு. கம்பரை ஆதரித்தவன் சடையப்பவள்ளல் என்பவன். சந்திரோதயத்தை வர்ணிக்கின்றபோது அவர், விரிந்த நிலவானது சடையப்ப வள்ளலின் புகழ்போல உலகெங்கும் பரவியதென்றும் (பாலகாண்டம், மிதிலைக் காட்சிப் படலம் 73-வது செய்யுள்), கடலுக்கு அணையிட்ட குரங்குகள் மலைகளைப் பிடுங்கி எறியவும் அவைகளைத் தவறாமல் நளன் என்னும் குரங்குத் தலைவன் ஏந்திய தன்மை, தஞ்சமென்றோரைச் சடையன் தாங்குதல் போல இருந்த தென்றும், (யுத்தகாண்டம், சேதுபந்தனப் படலம், 9-வது செய்யுள்), இராமனுக்கு மகுடாபிஷேகம் செய்யும்போது முடியைச் சூட்டும்படி சடையப்ப வள்ளலது முன்னோர்களே எடுத்து வசிட்டன் கையில் கொடுத்தார்க ளென்றும் (யுத்தகாண்டம், திருவபிடேகப் படலம் 37-வது செய்யுள்) நன்றி பாராட்டுகின்றார். அவ்வாறே வில்லிபுத்தூரார் தனது உபகாரியைப் பாரதத்தில் கொண்டாடக் காண்கிறோம். (கன்னபர்வம், பதினாறும் போர்ச்சருக்கம், 90-வது செய்யுளும், பதினேழாம் போர்ச்சருக்கம் 33-வது செய்யுளும்).

## வர்த்தமானர்.

**கதர் விற்பனை :—** காந்தி தமிழ்நாடு வந்து கதர்ப் பிரசாரம் செய்ததின் பயனாகத் தமிழ்நாட்டிலும், சென்னையிலும் கதர் கட்டுவோரின் தொகை அதிகரித்து வருகின்றது என்றும், சென்ற டிசம்பர் மாதத்தில் மாத்திரம் சென்னையிலுள்ள கதர் வஸ்திராலயத்தில் 15-ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கதர் விற்பனையா யிருக்கிறதென்றும், கதர் சங்கக் காரியதரிசி அறிவிக்கிறார்.

**தென் ஆப்பிரிக்கா இந்தியர் .—** தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தாருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, சென்ற 12 மாதங்களில் தாங்களாக இந்தியா திரும்பிய இந்தியர்களின் தொகை 3000. 1926-ம் ஆண்டில் 2100 பேர்களும், 1925-ம் ஆண்டில் 2160 பேர்களும் இந்தியா திரும்பினர். 1928-ம் ஆண்டில் 3000-க்கு அதிகமானவர் திரும்புவர் என்று கருதப்படுகிறது.

**சத்தியாக்கிரஹம்.—** இம்மாதம் 3-ந்தேதி யன்று சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் ஏராளமானசனங்கள் கூடினர். வண்டியிலோ பிரயாணிகளுக்குப் போதுமான இடமில்லை. இடவசதி வேண்டுமென்று அதிகாரிகளிடம் முறையிட்டும் பயன்படாதுபோகவே, சிலர் ரயில்போகும் தண்டவாளத்தில் போய்ப்படுத்துக் கொண்டனர். இச் சத்தியாக்கிரஹம் அதிகாரிகள் மனதை இளகச் செய்து விட்டது. வண்டிவசதியும் ஜனங்களுக்கு ஏற்பட்டது.

**சட்ட சபையிலிருந்து சன்னியாசம்.—** சென்னைச் சட்டசபை அங்கத்தினராய் இருந்த ஸ்ரீநாராயணரெட்டியார் என்னும் அரசியல் வாதி இருந்தாப் போலிருந்து தம்பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டுச் சன்னியாசம் பூண்டுள்ளார் என்றும், அவர் ஸ்ரீ அரவிந்தருடன் வசிக்கப் புதுச்சேரி சென்றுள்ளார் என்றும் தெரிகிறது. அவரது ராஜிநாமாவால் ஏற்பட்ட காலிஸ்தானத்தை திவான் பகதூர் கேசவப்பிள்ளை பெற்றுள்ளாராம்.

**கிறிஸ்தவர் புத்தராயினர்.—** யாழ்ப்பாணத்தின் கண்ணுள்ள பெரியவிளை என்ற ஊரில் வசிக்கும் 300 கத்தோலிக்கிய கிறிஸ்தவர்கள், தங்களது குருவான பாதிரியின் மேல் கோபங்கொண்டு, புத்த மதத்தைத் தழுவினார்கள் என்று கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகூறுகிறது

**மோட்டார் விபத்து .—** இம்மாதம் 5ந் தேதி பகல் 2 மணிச் சுமாருக்கு பூந்தமல்லிசாலையில் எழும்பூர்பாலத்தருகில் இரண்டு மோட்டார் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதின் பயனாக ஒரு வண்டியில் தீப்பற்றிக் கொண்டது. மற்றது சேத மடைந்தது. வண்டியோட்டிக்கும் அன்னலக்ஷிமி என்ற மாதுக்கும் பலமான காயம் ஏற்பட்டது. மொத்தத்தில் ஆறுபேர் காயமடைந்தனர் என்று தெரிகிறது.

**பம்பாயில் வேலை நிறுத்தம் :—** முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்ட மனத்தாங்கல் வேலை நிறுத்தத்தில் முடிந்தது. 10000 தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். சிலதொழிலாளிகள் தங்கள் வேலைசாலைக் கண்ணாடிக் கதவுகளில் கல்லெறிந்து உடைத்துள்ளார்கள் என்றும் தெரிகிறது. போலீசார் கலகம் நடவாது பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றனராம்.

**அஜ்மல்கான் .—** டில்லி வாசியும், யூனானி வயித்தியரும், தேசத் தொண்டருமான ஹகிம் அஜ்மல்கான் சென்ற வாரத்தில் ராம்புரி என்னுமிடத்தில் இறந்து போனார். இந்தியர் இவரது மரணத்தைக் குறித்து மிகவும் வருந்தினர்.

**கொள்ளைக்காரர்.—** டில்லியில் கொள்ளைக் கூட்டத்தார் கிளம்பி ஜனங்களுக்கு அதிகத் தொல்லையைக் கொடுத்து வருகின்றனராம். மஹேந்திரநாத் என்பவர் சிலதினங்களுக்கு முன் இக்கூட்டத்தாரின் கையில் சிக்கிக்கொண்டார் என்று தெரிகிறது. இவர்களை அடக்கப் போலீசார் முயன்று வருகின்றனராம்.

**தீ விபத்து .—** பெங்களூருக்கு அருகாமையிலுள்ள ஒரு ஊரில் 15 தினங்களுக்கு முன் மூன்று சிறுவர்கள் அங்கிருந்த செத்தைகளைச் சேகரித்துத் தீயிட்டுக் குளிர்காய்ந்து கொண்டிருந்தனரென்றும், அத்தீ பக்கத்திலிருந்த ஒரு வைக்கோல் போரில் தாவியது என்றும், அம்மூன்று குழந்தைகளும் தீக்கிரையாயினர் என்றும் ஒரு நிருபர் அறிவிக்கிறார்.


# OUR OWN PUBLICATIONS

(5) **1. Life of Barrister Savarkar**

By Chitra Gupta ... 1 8 0

**BOOKS BY SAVARKAR :—**

Hindu-Pad-Padashahi ... Rs. 0 0

Hindutva ... 1 4 0

An Echo from The Andamans ... 1 0 0

JUST PUBLISHED

**2. The Aravidu Dynasty of Vijayanagara**

Volume I. 1542 to 1614. ... Rs. 10 0 0

By Rev. Henry Heras, S.J.M.A.

*Prof. of Indian History, St. Xavier's College, Bombay.*

with a foreword by

Sir R. C. Temple.

**3. Economic Development**

***Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrial and Technical Education***

By Prof. Benoy Kumar Sarkar, M.A. Rs. 8

**4. England's Educational Policy in India**

By V. V. Oak, B.A., S.T.C. ... Rs. 2 0 0

'FORWORD' WRITES:— "This book is a document that will rise up to accuse before the tribunal of history."

'MODERN REVIEW' :—"It is certainly a book which all amply repay perusal by every student of Politics."

**B. G. PAUL & Co., Publishers,**

2. Francis Joseph St., G. T. Madras.

(6) ஸ்ரீமத் வால்மீகி

# இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 | பக்கம் | 6 காண்டம் ரூ 15 |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | | ரூ. 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,

1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை.




# அகப்பொருள் வரலாறு.

K. இராமரத்நம் ஐயர் B. A.

[முன் 2-ம் பக்கத் தொடர்ச்சி]

### பாங்கற் கூட்டம்

இவ்வாறு இருபகல் தெய்வானுகூலத்தால் தலைவியின் சேர்க்கையைப் பெற்றின்புற்ற தலைமகன் பின்னும் இந்நெறியிலேயே ஒழுக விரும்பாது அவளை மணமுறையாற் கொள்வதே தலை. ஆயினும் அது அதற்குமுன்னாக வேண்டிய காரியங்களால் கால நீடிக்கக்கூடும்; அதுகாறும் தான் அவளைக் காணாது பிரிந்திருத்தல் வேண்டும். அதற்கு அவ்வள வெளிதாகப் புதுமண மதுவின்தேறலை உண்டு மயங்கிய அவன் மனம் ஒருப்படுமோ? பல சில நாட் சென்றாலன்றி ஆராமை நீங்கி மனவமைதி பிறக்குமோ? ஆகையால் அவன் இன்னுஞ் சிலநாள் பழைய வழியே சென்று தலைவியைச் சேர நினைப்பது இயல்பே. ஆயினும் பிறருடைய உடம்பாடுமுதவியுமின்றித் தான் அடிக்கடி தலைவியைச் சந்தித்தல் இனிக் கூடுமோ கூடாதோ என்று ஐயுற்று, இனிச் செயற்பாலது யாதென்று தனமனத்தே நெடிது சூழ்ந்து, பிறந்து தன்னுடன் இளமைதொட்டுப் பழகித் தனது அந்தரங்க ஆப்தனானவனும், தனக்கு உற்றிடத்துதவும் நற்றுணைவனும், கல்வி கேள்விகளால் நிரம்பிய அறிஞனுமான பார்ப்பனப் பாங்கனைத் துணைக்கொளத் துணிந்தான்.

சில நாளாகச் சந்திக்காத அந்நண்பனை நாடிச்சென்ற தலைமகன் ஆவலோடு தன்னைக் காணவருந் தோழனை வழியிலே எதிர்ப்பட்டு அவனை உடனழைத்துக்கொண்டு வரைக்காட்சி விநோதங்காணச் செல்வான்போலத் தலைவியைத் தானெதிர்ந்த மலைச்சாரல் நோக்கி மெல்ல உலவிச் சென்றான். அப்பொழுது பாங்கன் தனது நண்பன் உடன்மெலிந்து தோளிளைத்து முகம்வாடி உற்சாகம் குறைந்திருக்கக் கண்டு, காரணமறியாது கவன்று வருந்தி, "நண்ப, உனக்குற்றதென்? கரிமேவிருந்து கடும்போர் புரிந்தோ, பரிமாவூர்ந்து வேட்டையாடியோ, தெய்வப் பல்படை தேறப் பயின்றோ, தென் தமிழ்த் தீங்கடல் திளைத்து மூழ்கியோ, ஏழிசைப் பண்ணின் சூழல் புக்குழன்றோ இவ்வாறு ஒன்றுக்குஞ் சலியாத உன் புயக்குன்று மெலிந்து, என்றும் வாடாத உன் முகமும் சாம்பி இருக்கின்றவே.

தென்செய்த பண்ணின் திறந்தெரிந் தோ? தெய்வப்
பாவலர்தாம்
முன்செய்த நூலின் முறைதெரிந் தோ? செம்
முகங்கருகிப்
பொன்செய்த மேனியும் புல்லென்று வாடிப்
புலம்பவெந்நோ
என் செய் ததோ? அறியேன் திருமேனி
இறைவனுக்கே

என்று பரிவுடன் வினவினான் அதற்குத் தலைவன் நடந்ததை வெளிப்படையாகச் சொல்லச் சிறிது வெட்கி, "நேற்று நான் மாவேட்டை விரும்பி மலையகத்தே சென்று சரியாநின்றேன். அங்கே ஓராரணங்கு தீண்டப் பெற்றேன். அவ்வரையரமகள் கூட்டரவு என் கலை நிரம்பிய முழுமதியை முற்றும் விழுங்கியது. வேறுய் வகை காணாது உன் நன்மந்திரத்தை நாடி வந்தேன்" எனக் குறிப்பால் உணர்த்தினான். அதைக்கேட்ட பாங்கன் உண்மையை உணர்ந்து, "எம்பெருமான் ஒரு பூங்கண்ணியிடைப் பட்டு வருந்தி இளைத்ததாகச் சொல்வது எனக்குப் பெருவியப்பாக இருக்கின்றது. ஒரு சிற்றிடைச்சி அணைக்க மழவிடையும் கட்டுண்டு கலங்கி நிற்குமோ!" என நகையாடி நயமொழி கூறி அவனைத் தெருட்டினான். அப்பொழுது தலைமகன், "எனது இன்னுயிரனையாய்: என்னை இத்தன்மையனாக்கிய நங்கையை நீ கண்டறியாய். அதனாற்றான் இவ்வாறு என்னை நீ நகையாடி இகழ்கின்றாய். எனக்கு உற்றிடத்துதவும் உயிர்த்துணைவனான நீயே என்னை இவ்வாறு பழிப்பாயானால் நான் என் விதியையன்றிப் பிறரை நோவதென்?" என உள்ளழிந்து வருந்தினான். அதுகண்ட பாங்கன், "அமிர்தம் தன்குணமாறிக் கைப்பினும், இரவி திசைமாறித் தெற்கெழினும், நீறாக நெடுவேலை நெருப்பெழுங் காலையும், குணங் குன்றாக் குணக்குன்றாகிய நீ உணர்வும் மதியுங் கலங்கி நான் தேற்றவந் தேறாது சீலத்தை மறந்து செயலற்றுத் தேம்புவது என் தீவினையே. கடல்வெதும்பி வெந்நீரானால் அதை விளாவத் தண்ணீருமுண்டோ?" என்று இதமொழி பலவுங் கூறித் தேற்றினான். எவ்வளவு தேற்றியும் ஆற்றானாய்த் தலைமகன் வருந்தக்கண்ட பாங்கன் அனுதாபமுற்று, "அதெல்லாங் கிடக்க, நின்னை இவ்வாறு மயக்கி மாலாக்கிய திருமகளை நீ கண்டது எவ்விடத்து? அவள் அணியிலக்கணம் யாது? நான் போய் அவளைப் பார்த்து வருகிறேன்" என்று கேட்டான். அவற்றையெல்லாம் தலைமகன் உள்ளவாறுணர்த்தக்கேட்ட பாங்கன், "இனி நீ கவலாதொழிக. இக்கணமே நான் அவ்விடத்தேகி அவளைக் கண்டு கணத்தில் மீள்கின்றேன். அதுகாறும் ஆற்றியிரு" என்று தலைமகனைத் தேற்றிவைத்துத் தான் அத்தண்மலைச்சாரலை நோக்கிச் சென்றான்.

தலைவன் கூறிய அடையாளங்களைக் கவனித்தோர்ந்து குறியிடத்தை நோக்கிச் சென்ற பாங்கன் தலைவி எதிர்ப்படுவாள் கொல்லோ, வாராமல் வீட்டகத்தே இருந்து விடுவாள் கொல்லோ, முந்தியேவந்து விளையாடிவிட்டுத் திரும்பியிருப்பாள் கொல்லோ, எனப் பலவாறு ஐயுற்றுச் சென்று அந்த மாதவிப் பொதும்பரின் அருகணைய அங்கே காரெழிலி நோக்கும் கலாபமயிலென்ன மடமங்கையொருத்தி தனித்து நிற்கக்கண்டு, ஓர் மாத்தருகே தான் மறைந்து நின்று அவ்விடத்தையும் அவளையும் செவ்வனே உற்று நோக்கி, "அசோகமரப் பாங்கர் மாதவி படர்ந்து வெயினுழைபறியா இளமரக்காவும் இதுவே; நண்பன் நயந்து பாராட்டிய உறுப்பெழில் வாய்ந்த குறிப்பிளங்கன்னியும் இவளே;

"முன்னாள் வருந்தி முழங்கும் பாவை
வழங்கவந்த
பொன்னார் கமலமென் பூந்திருவே யிவர்;
போந்திருந்த
இந்நாக வெற்பில் எதிர்ப்பட்ட காலையில்
என்னுயிரை
அன்னான் இவருக்கு மாலாவ தும்மினி
ஐயமன்றே"

என அவளது பேரழகைக் கண்டு பிரமித்து நின்றான். பிறகு, "இத்தகைய புத்தழகியைக் கண்டு கூடிப் பின் பிரிந்து, உணர்வழியாது இங்குநின்றும் அங்குவந்து, என்னைக் காண்பளவும் ஆற்றியிருந்து, எனக்கு இத்தனையும் தப்பாமற்சொன்ன அண்ணலே திண்ணியன்; அவன் மனநிறையே நிறை" எனத் தலைவனை வியந்து, பின்,

"பண்ணார் பனிமொழி வண்ணமும், தண்ணறும்
பைங்குவளைக்
கண்ணால் அருள்செய்த காதலும், காமக்
கனல்கொளுந்திப்
புண்ணான நெஞ்சமும், தஞ்சமில் லாதவன்
வன்பொறையும்
எண்ணா தருவினை யேனிகழ்ந் தேனென்
இறைவனையே"

என மிகவும் இரங்கினான்.

பிறகு அவன் விரைவொடு மீண்டு வந்து,

இவ்வளவில் ஏகுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவில் மீளுங்கொல்

என்று நினைந்து தான் வருவழியை ஆவலோடு நோக்கி நின்ற தலைவனையுற்று, "நீ கூறிய குறியிடத்தே சென்றேன். அங்கே, புணர்ந்துடனகன்ற பொருகரியுன்னி மணந்தாழ் கூந்தல் மடப்பிடி யொன்று வடிக்கண் பரப்பி நிற்கக் கண்டேன்" எனக் குறிப்பா லுணர்த்திப் பின்னர்,

வாவிகண் டேன்; மலர்ச் சோலைகண் டேன்;
மருங்கே மருங்கில் தேவிகண் டேன்;
குழற் பாரங்கண் டேன்; செழுந்
தேனவிழும் காவிகண் டேன்;
கண்ட நின்வழி யேதன் கருத்துவைத்த
ஆவிகண டேன்; கண்டிலே னண்ணலேநின்
அறிவின்மையே

என வெளிப்படையாகவும் கூறக்கேட்ட தலைவன் பெருமகிழ்வுற்று அங்கே சேறலுற்றான்.

அங்கே சென்று, தன்னயத்தோடு வண்டலயாமலும், ஊசலாடாமலும், வரிப்பந் தடிக்காமலும், தவமுயல்வாள் போலத் தனித்துநின்ற தலைமகளைக் கண்டு "வெளியே உலவும் என்னுயிரனையாய். வாயைத் திறந்தால் அங்குள்ள முசது திர்ந்து விடுமென்றோ ஒன்றும் உரையாது மௌனமாய் நிற்கின்றாய். காவிசோர் விழியாய், கன்னல் சேர் மொழியாய், துடிநேர் இடையாய், பிடிசார் நடையாய்" எனத் தன் ஆற்றாமை தோன்றப் பலபடியாகப் புகழ்ந்து எதிர்நின்றான். இவ்வாறு தன் முன்னின்று பெரும்பான்மை கூறக்கேட்ட தலைவி நாணத்தால் தலைகவிழ்த்துச் சற்றயலலே ஒதுங்கி நின்றாள். அதுகண்டு அவன் அவளை யணுகி அவளது உத்தராசங்கத்தைப் பற்றலும் அது நழுவி விழுந்தது. அதனால் அவள் மிகவும் வெட்கித் தன்னிரு காத்தாலும் இரு கண்ணையும் புதைத்துக்கொண்டு அயலே நின்ற மாதவிக் கொடியைச் சார்ந்து, "நன்மணம் பெறுது கொழுநனை மேவிய மாதவியே, உடை சோர்ந்ததினால் வெட்கி மறைவு தேடி உன்னைச் சேர்ந்தேன்; புகலிடந் தந்து எனைக் காவாய்" என அதைத் தழுவி நின்றாள்.

அதைக்கண்டு அவன் அங்கவளைப் பின்தொடர்ந்தணுகி, "நின் கண்ணெனும் பூசலம்பு என்மருமத்திற் பாய்ந்து என்னுயிரை மாய்க்குமெனக் கருதியோ கருணையால் அவற்றைக் கையடக்கி வைத்துள்ளாய்? அது மட்டும் போதாது. ஒளியாது எதிர்நின்று என்னைத் தாக்கிவருத்தும் பிறவுறுப்புக்களையும் இவ்வாறு மறைத்தாலன்றி எனக்குய்வழி இல்லை. அன்னியரைக் கண்டன்றோ அகத்தெழுவது நாணம். இருதலைப்புள்ளின் ஒருயிரனையம் யாம். ஆகையால் நாணையோட்டிக் கணை விடுத்து என்மார்பகத்தே எய்திடுவாய்" என நெருங்கி அணைந்தான்.

அப்பொழுது தலைவி, ஒருகாலுந் தன்னை விட்டு நீங்காத நாண் அழல்சார்ந்த மெழுகுபோற் கரைந்தழிய, நிறையென்னும் அங்குசம் நிமிர்ந்துபோகத் தன்னையுந் துறந்து தலைசாய்த்து அவசமுற்று நின்றாள். அச்செவ்விநோக்கிச் செம்மலும் தன்னுதாவால் அவளைத் தாங்குவான் போலக் கிட்டி நெருங்கி ஒருகையால் அவளது இறுமருங்குலை அணைத்தும் ஒருகையால் அளிக்குலமோட்டி அளகம் நீவியும் அவளைத் தழுவிக் கூட இருவரும் இன்புற்று மகிழ்ந்தார்கள்.

பிறகு அவளைப் பாங்கியர் ஆயத்துய்த்துப் பிரியக் கருதிய தலைமகன்,

"வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்"

என்றும்,

"அறிதோ றறியாமை கண்டற்றால், காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு."

என்றும் அவள் தந்த இன்ப நலத்தைப் பாராட்டி, நீ இனிச் சென்று வலம்புரிக் குழாத்திடை சலஞ்சலமென்ன நின்னாயத்திடைச் சேர்வாயாக. இனி இவ்வாறு நீ தனித்து வருதல் தக்கின்று. உன்னுயிர்ப் பாங்கிக்கு உண்மையை ஒளித்தொழுகுதலும் முறையன்று. நாளை நீ இவண் வரும்போது உன்னுயிர்த் தோழியையும் உடனழைத்துவா" எனச் சொல்லி அவளை ஆயத்துய்த்தான்.

அவளை விடுத்து மீண்டு வந்து தன் இன்னுயிர் நண்பனை யுற்று, "என்னைக் கண்டு வாளா துன்னுரை வழங்கிச் செல்லாது எனது

"உயிர்க்
கேளாகி வந்துபின் கேட்டதுவோ? கண்டு
கேட்டபின்னும்
தாளால் வருந்தியும் நெஞ்சால் அழுங்கியும்
தாமுயன்று
கோளாக இன்னலங் கூட்டியதோ?"

எதைத்தான் ஏற்றவாறு எடுத்துரைப்பேன்? நீ செய்த நன்றிக்குத் தகுந்த கைம்மாறாக எதைத்தான் கொடுப்பேன்?" என இன்னுரை பல பகர்ந்து முறைமை செய்து அவனுடன் தன்மனைக்கு மீண்டான். மீண்டு நெடுநேரம் அவனோடு அளவளாவி யிருந்தபின் அவன் மறுநாள் வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் செல்லத் தலைவன் தலைவியை நினைந்தே அன்றிரவும் நற்றுயில்பெறாது மாலாகிப் பொய்த்துயில் கொண்டு மறுநாட் காலையில் எழுந்தான்.

இங்குத் தலைவன் செயல் இவ்வாறாக, தலைவனை விட்டுப் பிரிந்து ஒல்கி நடந்து தன் பாங்கியரைத் தலைவி கூடினாள். அங்குமிங்குந் தேடி அவளைக் காணாது கலங்கிய உயிர்ப்பாங்கி அவளைக் கண்டதும் ஆவலுடன் முன் சென்று, "நீ எம்மினீங்கி இவ்வளவு நேரம் எங்கிருந்தாய், என் செய்தாய்?" என்று கேட்கத் தலைமகள் "கோட்டனவுங் கொடியனவுமான நறுமலர் பல நாடிச் சென்றேனாக, நான் ஒரு தேமாம் பொழிலகத்தே புக்கேன்; அங்கே இதழ் விரிந்த தாமரைப் பூவைக் கூடுகட்டுவதற்காக வாயிற் கவ்விக்கொண்டிருந்த அன்னங்கள் பொன் விளக்காக, குயில்கூவுதல் முழவமாகத் தும்பி இன்னிசை முரல, மயிலிரண்டு மாக்கொம்பில் மணம்புகக் கண்டு நினைவின்றி நின்றுவிட்டேன்" என்றாள். ஆனால் அவள் கூந்தலும், மெய்யும் பழமணமாறி புதுமணங் கமழ்தலும், அவள் கண்கள் வெள்ளை நோக்கின்றி கள்ளநோக்குக் கலந்திருத்தலும் வாடிய முகமும் மேனியும் புத்தெழில் பெற்று விளங்குதலுமாகிய வேறுபாடுகளைக் கண்டு அவளுரைத்ததை உண்மையாக் கொள்ளாது இவளுக்கு யாதோ ஒருவனுடைய புதுக்கூட்டம் நேர்ந்திருக்குமென்று ஐயுற்று, பின்பு தனித்துத் தலைவியை வினவி உண்மையை அறியவேண்டுமென்று நினைத்து, அவ்வையத்தைத் தன்னுள்ளடக்கி மேலொன்றும் உரையாமல் இருந்துவிட்டாள். பிறகு அவர்களெல்லோரும் தலைவியுடன் உறைவிடந் திரும்பிவிட்டார்கள்.

இவ்வளவும் மூன்றாநாள் நிகழ்ச்சி.



# காங்கிரஸ்.

1927-ம் வருஷம் டிசம்பர் மாதம் 26-ந் தேதி மாலை 2 மணிச் சுமாருக்கு எழும்பூர் ஏரியில் அமைக்கப்பட்ட காங்கிரஸ் நகரில் 42-வது காங்கிரஸ் மஹாநாடு ஸ்ரீ அன்சாரியின் தலைமையில் கூடிற்று. இந்தியத் தலைவர்கள் பலர் பல மாகாணங்களினின்றும் வந்திருந்தனர். வரவேற்புச் சபைத் தலைவரான ஸ்ரீமான் முத்துரங்க முதலியார், தமது முன்னுரைப் பிரசங்கத்தில் கூறியதாவது:—

இந்நாள் நாடு உற்ற நிலைமைக்கும், ஒற்றுமை யின்மைக்கும் காரணம், ஜனங்களிடம் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கவல்ல திட்டம் ஒன்றைக் காங்கிரஸ் செய்யாமையே யாகும். இதுபோது நமது ஜனங்களிடம் ஏற்பட்டுள்ள தளர்ச்சியைத் துடைத்துப் புத்துயிர் அளிக்கத்தக்க வேலை துவக்குதலை இனி நாம் கையாளச் சமயமும் வந்துள்ளது. நாட்டினிடம் ஆண்டவனருளால் ராயல் கமிஷன் காரணமாக எழுந்த புது எழுச்சியை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்வோமாக. பால்டுவின் அரசாங்கத்தாரும், இந்திய மந்திரியான பிர்கன்ஹெட்டு பிரபுவும், இந்தியாவின் தகுதியை நிர்ணயிக்க ஒரு கமிஷனை வகுத்து 'இதை இந்தியா மறுத்தால் மறுக்கட்டும்' என்று நகைத்தனர். இந்தியரை அங்கத்தினராகக் கொள்ளாத இக்கமிஷன், நம்மை, நமது நாட்டை, சுயநிர்ணய தத்துவத்தை அவமதிப்பதாகும். இந்தியாவை, படத்தளவில் கண்ட சிலர் இந்நாட்டின் தகுதியை அறிதல் என்பது பொருளற்ற செயலே யாகும். இதை நாம் ஒருமுகமாய் எதிர்த்தே தீரமேண்டும். இத்துடன் நாம் நில்லாது நமது நாட்டிற்கு ஏற்ற சுயவாட்சித் திட்டமொன்றையும் செய்தல் வேண்டும். ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கையாளப்படும் (Federal System) முறை நம் நாட்டிற்கு ஏற்ற முறையாகாது. நாட்டைப் பாஷை வாரியாகப் பிரித்து அவைகளுக்கு தனித்தனிப் பொறுப்பாட்சி தரல் என்பது நாட்டினரிடம் ஒற்றுமையை வளர்க்காது, பிரிவினை எண்ணத்தை உண்டாக்கும். எனவே இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் கையாளப்படும் ஏகதத்துவ அரசு முறையே (Unitary System) நமக்கு வேண்டும். ஸ்ரீமான் எஸ். சீனுவாஸ ஐயங்கார் செய்துள்ள திட்டம் ஏற்கத்தக்கது. நமது பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நமது அரசியல் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்பாராயின், அவர்களது ஆதிக்கத்தினின்று விலகவும் வேண்டித்தான் வரும். கமிஷனைப் பகிஷ்கரிப்பதுடன் நில்லாது, வகுப்பு வேற்றுமை, மத வேற்றுமை இவைகளை ஒழித்து, மது விலக்கு, கதர், சுதேசியம் இவ்வேலைகளில் நாடு மனதைச் செலுத்த வேண்டும். சிறையிலிருக்கும் வங்காள தேசபக்தர்கள் விடுதலை முயற்சியையும் நம்நாடு மறத்தல் கூடாது. அன்சாரியைத் தலைவராகக் கொண்ட இக்காங்கிரஸ் நாட்டில் ஒற்றுமையையும், அரசியல் முயற்சியையும் தருமென்று நம்புகிறேன்.

இன்னவாறு உபசாரணைக் கழகத் தலைவர் பேசி முடித்ததும் தலைவர் கரகோஷத்திற் கிடையே பேசியதாவது:—

ஏகாதிபத்திய ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டும், விலைப் பொருள்கள் மலிந்த பிரதேசங்களனைத்தையும் கைவசப்படுத்திக்கொண்டு, அதன்மூலம் ஐரோப்பாவில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு வருமானம் ஏற்படுமாறு செய்யவும், அச்சாலைகளில் தயாராகும் சாமான்களை அதிகமான வருமானம் ஏற்படும் வகையில் விற்பனை செய்து, பணம் திரட்ட வசதிதரும் மார்க்கட்டுகளைக் கைப்பற்றவுமே கீழ் நாடுகளில் உள்ள எளிய தேசங்களினுடைய சுதந்தரங்களைப் பறிமுதல் செய்து, தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்து ஐரோப்பிய லோகாயதர் ஏகாதிபத்தியங்களைக் கண்டுள்ளனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ற கட்டடம் இந்தியா என்ற அஸ்திவாரத்தின்மீது நிற்கிறது. இந்தியா, பிறநாடுகளைப்போல் விடுதலை பெறுமாயின் இவ்வேகாதிபத்தியக் கட்டடம் இடிந்து தூளாய்விடும். ஆசியா கண்டத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், இந்தியா முதன் முதல் சுதந்திரம் பெறவேண்டும். ஏனைய கீழ்நாடுகளின் விடுதலையும் இந்தியாவை யொட்டி யிருப்பதால், நமதும், நமது சகோதர நாட்டாரதுமான நன்மையை ஒட்டி விடுதலை வேலை செய்யவேண்டும். எனவே நாம் இவ்வேளையில், நமக்குள் பூசல் பல விளைத்துக் காலங் கழித்தல்நன்றன்று. விடுதலைக்கானவழியில் காந்தியடிகள் கூறியவாறு, கூடுமானால் பிரிட்டிஷ் கொடியின் கீழும், அவசியமிருப்பின் அதற்கு வெளியிலுமான சுதந்தரம் பெற வேலை துவக்க வேண்டும். அடுத்தபடியாக நாம் யோசிக்கவேண்டியது, இனி நாம் சுயராஜ்யம் பெறக் கையாள வேண்டிய முறையும் வகையுமாகும். அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்தல் என்பது பொருளற்ற சொற்றொடரேயாகும். ஒத்துழைப்பு என்பது ஒரு பொதுவான இலக்ஷியத்தைக் கொண்டவர்களுக்குள் தான் சாத்தியமாகும். இலக்ஷியத்தில் முறண்பாடுடைய நாமும், அரசாங்கத்தாரும் எங்ஙனம் ஒத்துழைத்தல் கூடும். அப்படி ஒத்துழைத்தல் என்பது அவ்விருவரில் ஒருவர் தமது லக்ஷியத்தை விடுத்துச் சரணாகதி செய்தலே யாகும். அதாவது வலுத்தவரது லக்ஷியத்தையும், எண்ணங்களையும் பூர்த்தி செய்விக்கும்பொருட்டு, எளியவர் தமது இலக்ஷியத்தை விட்டுவிடுவதே யாகும்.

மேலும் பார்ப்போம். இந்திய ஜனங்களின் கோரிக்கையை அவமதித்துக் காலிலிட்டு மிதித்து, அவர்கள் விரும்பாத ஒரு கமிஷன் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்க மந்திராலோசனை சபையார் அனுப்பியுள்ளனர். இந்நிலையில் ஒத்துழைப்பு முடியுமோ. கடவுளுடைய கிருபையால், நல்ல சமயம் நமக்குக் கிடைத்திருக்கின்றது. அதுதான் நமது ஜனங்களின் பொருப்பாட்சித் திறம் அறியவிடுத்த ராயல் கமிஷன். பிரிட்டிஷ் நீதி என் போரும், அவர்களிடம் வரம் வாங்கலாம் என்ற பொய் எண்ணம் கொண்டோரும் மயக்கம் நீத்துக் கண் திறந்து பிரிட்டிஷ் ராஜதந்திர தத்துவத்தைப் பார்க்கச் செய்துள்ளது. இச்சமயத்தை இந்தியர் வழக்கம்போல் போக்கிலே போகவிடாது நாம் நமது வகுப்புப்பூசல், மதப்போர்களை விடுத்து ஒரே மனத்தினராய் அணிவகுத்து விடுதலைப் போரில் பொருந்த வேண்டும்.

இனி இந்து முகமதிய விஷயத்தைப் பற்றிக் கவனிப்போம். நமது தற்கால அரசியல் நிலையில் இந்துக்களும், முகமதியர்களும், பொருந்தாப் போராட்டத்தில் இறங்கி இருக்கின்றனர். உயிருக்கும், பொருளுக்கும் சேதம் தரும் நிகழ்ச்சிகளை எவ்வளவு கண்டித்தலும் பொருந்தும். இம்மதப் போரால் துவேஷமும், மனக்கசப்பும், நாளுக்கு நாள் வளர்ந்தே வருகிறது. இதை உடனே நிறுத்தி அமைதி காணலே முதல் வேலை. இத்தொல்லையை விலக்க முயலுங்கால், நோயின் வெளித்தோற்றமான சில அடையாளங்களையே நோயென்று

கருதுவது பழுது. இருவகுப்பினரும் பிறர் மதத்தை மதிக்கத் துவக்குவார்களாஞல், பூசல்கள் ஒழியும்; பசுக் கொலே, வாத்தியம் என்னும் பேரால் நடக்கும் தொல்லேகளும், சண்டைகளும் பழங்கதையாய் விடும். ஒருவர் உரிமையை மற்றவர் மதிப்பதும், ஒரு மதத்தின ருக்கு மனவருத்தம் தரும் காரியங்களைச் செய்யாதிருப் பதுமே ஒற்றுமைக்கு வழி. இந்து முகமதிய ஒற்று மையே சுயராஜ்யப் போராட்டத்தின் முதற்படி. இம் மஹா நாட்டார் அதற்கான வேலையைச் செய்தல் வேண்டும். ''

பிறகு தலைவர் பகிஷ்காரத்தை வர்புறுத்தியும், ஒத் துழையா இயக்கத்தில் தமக்கு நம்பிக்கையைக் கூறியும், இந்திய சுய ஆட்சித் திட்டம் ஒன்றைச் செய்ய வேண் டிய அவசியத்தை எடுத்துக் காட்டியும் பேசிஞர். சுயவாட்சித் திட்ட விஷயமாகக் கூறுகையில், 'நாம் வகுத்துவைக்கும் திட்டம் எல்லா வகுப்பினராலும், மதத் தினராலும் எற்கத் தக்கதாயிருக்க வேண்டும். மேலும் அது, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போல் தனித்தனி யாக மாகாணங்களைப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் சுய நிர்ணயம் தரவேண்டும். இந்த (Federal System) முறையே இந்தியாவிற்குத் தகுந்தது என்பது எனது அபிப்பிராயம். '' என்று கூறிஞர். கடைசியாக? மது விலக்கு, சுதேசியம், தேகப் பயிற்சி முதலிய வேலைகளை வற்புறுத்திஞர்.

## தீர்மானங்கள்.

சென்னையில் கூடிய 42-வது இந்திய காங்கிரஸ் மஹாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

(1) தேசபக்தரும், காங்கிரஸ் ஊழியரும், காங்கிரஸ் கமிட்டி முதலிய பொது ஸ்தாபனங்களில் தொண்டு செய்தவருமான ஸ்ரீ பிருதுவி சந்திரராயின் மரணத் தைக் குறித்து இக்கூட்டம் வருந்துகிறது.

(2) தேசபக்தி ஒன்றே காரணமாகக் குற்றங்க ளைச் செய்த காக்கோரிக் குற்றவாளிகளுக்கு அளிக்கப் பட்ட தூக்கு தண்டனையை இக்கூட்டம் கண்டிக் கிறது.

(3) சீனாவில் நாட்டு விடுதலைக்காகப் போராடும் சீனர்களுக்கு அனுதாபம் காட்டுவதுடன், சீனர் சீக்கிரம் விடுதலை பெறுதலை இந்தியர் விரும்புகின்றனர். இந்தியா வினின்று சீனாவுக்கு வைத்திய உதவி அனுப்ப முடி யாது செய்த இந்திய அரசாங்கத்தார் செயலை இந்தியா கண்டிக்கிறது. மேலும் சீனாவில் சீன சுதந்திரத்திற்கு இடையூறாய் இருக்கும் இந்தியத் துருப்புக்களையும் இந் தியப் போலீஸ் படையையும் உடனே இந்தியாவிற்குத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு இக் கூட்டம் கேட் டுக் கொள்ளுகிறது.

(4) அயல்நாடு செல்ல விரும்பும் சில இந்தியருக்கு அனுமதிமறுப்பதும், ஸ்ரீமான் சக்லத்வாலாவிற்கும், அயல் நாடுகளில் வசிக்கும் பிற இந்தியர்களுக்கும் இந்தியா வர அனுமதி தராததுமான அரசாங்கத்தார் செயலை இக் கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. மேலும், அனுமதி முறையை (Passport) ரத்து செய்யவேண்டுமென் றும் வற்புறுத்துகிறது.

(5) பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவிலும், வட மேற்கு மாகாணத்திலும், கிழக்குக் கடலிலும், யுத்ததள வாடங்களைச் சேர்ப்பதும், அரண்வேலை செய்வதும் கவலைக்கிடமானதாக விருக்கிறது. இந்தியர் யாருடனும் சண்டைசெய்ய விரும்பவில்லை. இம்முயற்சி இந்தியா வினிடம், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற் குப் பதிலாக, பயனற்றதும், துன்பம் தரத்தக்கதுமான யுத்தத்தையே தரும். எனவே இவ்வேற்பாடுகள் உடனே நிற்கவேண்டும்.

(6) நாகபுரியில் ஆயுதச்சட்டத்திற்கு விரோதமாய்ச் சத்தியாக்கிரஹம் நடத்திச் சிறைபுகுந்து இப்பொழுது உண்ணாவிரதம் பூண்டுள்ள அவாரி அவர்களது தியா கத்தையும், தேசபக்தியையும் இம்மஹாநாடு போற்று கிறது.

(7) பர்மாவைப் பர்மியர் அபிப்பிராயத்திற்கு விரோ தமாய்ப் பிரிக்கவேண்டிச் செய்யப்படும் எற்பாட்டை இம்மஹாநாடு கண்டிப்பதுடன், இவ்விரண்டு நாடும் எப் பொழுதும்போல் ஒன்றாயிருக்க வேண்டுமென்று வற் புறுத்துகிறது.

(8) இந்தியா, எந்தவிதமான ஆதிக்கத்தின் கீழுமில் லாத முழுப்பொறுப்பாட்சியைப் பெறுதலே இந்தியரின் நோக்கமாகும்.

(9) இந்தியாவின் நன்மையைநோக்கி இந்துக்களும், முகமதியர்களும் ஒருவர்மதத்தை மற்றவர்மதித்துநடந்து கொள்ளவேண்டும். இந்துக்களுக்கும், முகமதியர்களுக் கும் மசூதியின்முன் மேளம் வாசிக்கவும், பசுக்களை வதைக்கவும் உரிமையுண்டு. ஆஞல், ஹிந்துக்கள் மனம் நோகும்படி பசுக்களை வதைத்தலை முகமதியர்கள் விடுக்கவேண்டுமென்றும் இந்துக்கள், முகமதியர் மனம் புண்படுமாறு மசூதிமுன் வாத்தியம் வாசிக்காதிரு வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

(10) பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால் நியமிக்கப்பட்ட ராயல் கமிஷனை இந்தியர் எற்க முடியாது. இதைப் பகிஷ்கரிப்பதே சுயமரியாதையுடைய இந்தியாவின் கடமையாகும். இப்பகிஷ்காரவேலையை ஒட்டிப்பிரசாரம் செய்து, கமிஷன் அங்கத்தினர்கள் இந்தியா வருங் காலையில் எங்கும்வேலைநிறுத்தத்தைஎற்படுத்தவேண்டும். சட்ட சபையினர் கமிஷனுக்கு எந்தவிதமான உதவியும் தரலாகாது. சட்டசபை அங்கத்தினர் தங்கள் ஸ்தானத் தைக் காப்பாற்றிக் கொள்ளவே சட்டசபை செல்ல வேண்டும். வேறு எந்தவிதமான வேலையிலும் சம் பந்தப்பட்டுக் கொள்ளக்கூடாது.

பிறகு ஆக்க வேலைக்கான பல சிறு தீர்மானங்களும் சுதேச சமஸ்தானங்களின் நிலைமையைப் பற்றியும், பிரிட்டிஷ் சரக்கு பகிஷ்காரத்தைப் பற்றியும், தென் ஆப்பிரிக்கா இந்தியர் விஷயத்தைப் பற்றியும் தீர்மானங் கள் செய்யப்பட்டன.





பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பிஞல் லோகோபகாரிக்குச் சந்தா தாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்கை யெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய், வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர் : பரலி - சு. நெல்லயப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனம்.





# யுனைடட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ்

(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ஞூ ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்

பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.

சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமா யிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவ தும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனல் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யூரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்ப னியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோ டும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகா ணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகர மான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங் கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யூரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந் தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரி யப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.



# Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calliing ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

## V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

(1)

# இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரான்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

## நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)

Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுக்கும் சந்து ஸரூப் சந்து K. T.

வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.

மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட், பம்பாய்.

லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.

வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

**நாராயின் தாஸ் கிர்தர்தாஸ்,**

உள்ளூர் மானேஜர்,

நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

(4)

# நாஷ்
# NASH

## மோடார்கார் உலகத்தில் இதுவே முதல்



நாஷ்
எல்லாவிதத்திலும்
விலைக்குமேல்
பயன் கோடுக்கும்.

சோல்
ஏஜண்டுகள்

நாஷ்
வெகுதூரம் வெகுகாலம்
வேகமாய் ஓடுவதில்
இதுவோன்றே - -
- - - முந்துகிறது.

**மோடார் ரிகண்டிஷனிங் ஸ்டேஷன்,**

161, மவுண்ட் ரோட், சென்னை.

தந்தி அட்ரஸ்:—ஆல்மோடார். (Allmotor) போன் நம்பர் 3708.

*N. B.—Wanted distributors in every district.*

Printed at the B. N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.,